
காண்டீபம்



பரமசிவனின் அருள் கொண்டு
பாராளும் குணம் படைத்த காண்டீபன்
உற்றாரும் மிக்காருமன்றி ஊரிலுள்ள
எல்லோரும் ஏங்கி வரும் சட்டவாளன்

பல்துறை எழுத்தாளன் பன்னூல் வாசகன்
பண்பான பேச்சாளன்
வியக்க வைக்கும் பட்டிமன்ற விவாதி
நாடறிந்த ஓட்டவீரன் நுணுக்கம் பல பெற்ற
பல்துறை விளையாட்டு வித்தகன்

வல்லையம்பதி தந்த வல்லமை மிகு மைந்தனிவன்!!!

## ஐயா...

21.09.1985 பச்சிளம் குழந்தையாக உங்கள் கரங்களில் முதன்முதலாக நான். கோடான கோடி கற்பனைகளோடும் ஆசைகளோடும் எதிர்பார்ப்புகளோடும் உள்ளம் பூராவும் பூரிப்போடும் எனைத் தூக்கியிருப்பீர்கள். முதனாள் இரவு ஆஞ்சநேயரைக் கனாக் கண்டதால் சீதாதேவியின் மறுபெயரான ஜானகி என நாமமிட்டு தந்தை ஸ்தானத்தை உங்களுக்களித்த என்னை எத்தனை வாஞ்சையோடு வளர்த்திருப்பீர்கள். என்னுடைய சிறுவயதிலேயே உங்களது புத்தகங்களை ஆர்வத்துடன் ஒவ்வொரு பக்கமாகத் தட்டித் தட்டி பல மணித்தியாலங்கள் நான் பார்த்ததாக இறுதிவரை பல தடவைகள் கூறியிருப்பீர்கள். அம்மா வேலைக்குச் செல்லும்போது அழும் என்னை வேவில் பிள்ளையார் கோயிலுக்குத் தூக்கிச் சென்று அங்குமிங்கும் மரக்கிளைகளில் திரியும் அணில்களைக் காட்டி எனை மகிழ்வித்த கதையும் இறுதிவரை பல தடவைகள் நான் உங்களிடமிருந்து கேட்டிருக்கின்றேன். குழந்தையாக நானும் தந்தையாக நீங்களும் அகமகிழ்ந்த தருணங்கள் பற்பல.

சிவன் கோயிலுக்கு நித்தமும் உங்களுடன் வருவதும், நீங்கள் மகாவிஷ்ணு விக்கிரகம் முன்னும் பின் சரஸ்வதிதேவிக்கு முன்னும் அமர்ந்திருந்து நீண்ட நேரம் பிரார்த்தனை செய்யும்போது நான் உங்கள் அருகிலேயே நிற்பதும், பூஜைகள் முடிவடைந்த பின் மறுநாளிற்கான வாகனத்தை ஆயத்தப்படுத்தலில் நீங்களும் வேறு சிவனடியார்களும் ஈடுபடுவதை நான் அமைதியாக இருந்து பார்ப்பதும்... என்னையும் வினோவையும் ரேவடிக் கடற்கரைக்கு அடிக்கடி நீங்கள் கூட்டிச் செல்வதும், பருத்தித்துறைக்கு மிதிவண்டியில் எனைக் கூட்டிச்செல்லும் போது நீங்கள் பகிர்ந்து கொள்ளும் அநுபவங்களும் அரசியல், சரித்திரம், விஞ்ஞானக் கதைகளும்..., "மலர்ந்தும் மலராத பாதி மலர் போல.....", "மயக்கமா கலக்கமா மனதிலே குழப்பமா....." என்ற பாடல்கள் வானொலியில்

ஒலிக்கும் போதெல்லாம் என்னையும் கேட்கச் சொல்லுவதும்... மீண்டும் ஒருமுறை ஒரேயொரு முறை பாவி எனக்குக் கிடைக்காதா?

இரவில் அம்மா எமக்கு உணவு ஊட்டும்போது நீங்கள் கூறும் மகாபாரதம், ராமாயணம், கண்ணன் கதைகள் மற்றும் உலக சரித்திரம் என் குழந்தைகளுக்கு உங்கள் மூலமாகக் கேட்கும் பாக்கியம் கிட்டவில்லையே ஐயா.........

ஐயா, நீங்கள் ஒருபோதும் எம்மிடம் கண்டிப்புடன் நடந்ததில்லை. நானும் வினோவும் சண்டை போட்டு உங்களிடம் முறைப்பாடு செய்தால் கூட என்னவென்றே விசாரியாது இருவரையும் ஒவ்வொரு மூலையில் அமர்ந்து கொள்ளும்படி கூறிச் செல்வீர்கள். எமது சண்டையும் பறந்து போய்விடும்.

நாம் தினமும் வெளியில் செல்லும்போதெல்லாம் எந்தெந்த முடக்குகளில் எங்கெங்கு பார்த்துத் திரும்ப வேண்டுமென்று ஒவ்வொரு முறை சொல்வதும், தொலைக்காட்சி, மின்னழுத்திக்கு முன்பாக தடிப்பான இறப்பர் விரிப்புகளை விரிப்பதும், கட்டுக்கிணறு உள்ள காணியில் வீடு கட்டுவதற்காக எமது பாடசாலையிலிருந்து சற்றே தொலைவிலுள்ள ஆனந்தபுரத்தைத் தெரிவு செய்ததையும், இரவில் நான் படிக்கும்போது எங்கே தூக்கத்தில் விளக்கின் மீது விழுந்து விடுவேனோ என்ற பயத்தில் நீங்களும் விழித்திருந்ததையும் அப்போது நாம் மகிழ்வோடு ஏற்றதில்லை. தாயாகிய தருணத்திலிருந்து உங்களது மன உணர்வை எமது பாதுகாப்பை உறுதிப்படுத்த நீங்கள் அநுபவித்த கஸ்டங்களை உணர்கிறேன் ஐயா......

பல்கலைக்கழகத்தில் நான் விடுதியில் இருந்தபோது மனச்சோர்வு ஏற்படும் நேரங்களில் எல்லாம் நீங்கள் தொலைபேசியில் கூறிய அறிவுரைகள்........இவையெல்லாம் இனி எப்போது ஐயா......

ஆண்டு 2008. பேரிடி. கம்பீரத்துடனும் நிமிர்ந்த நடையுடனும் மன உறுதியுடனுமிருந்த உங்களுக்கு திடீரென பாரிசவாதம். பாரிசவாதம் என்றால் என்னவென்று அவ்வளவாக எனக்குத் தெரிந்திருக்கவில்லை. உங்களது இடதுபக்க அவயங்கள் செயலிழந்தன. துவண்டு போனது நாம்தான் நீங்களல்ல. உங்களது மன உறுதி சிறிது கூட குறையவில்லை. எங்கே படுக்கையாகவே இருந்து விடுவீர்களோ என நாமெல்லாம் எண்ணும்போது உங்கள் மன வலிமையால் மீண்டும் எழுந்து நடந்தீர்கள். ஏன் நாங்களே

செய்ய முடியாத உடற்பயிற்சிகளெல்லாம் நீங்கள் இலகுவாக செய்து கொண்டிருந்தீர்கள். செயலிழந்த இடதுபக்க அவயங்களை அம்மாவின் துணையுடன் வென்றே விட்டீர்கள். இடதுகைப் பழக்கமுள்ள நீங்கள் வலது கையாலும் அவ்வப்போது எழுதியதை துக்கத்துடன் பார்த்திருக்கிறேன். ஏன் இந்தியாவிற்குக் கூட இரு தடவைகள் சிகிச்சைக்காக தனியே சென்று வந்தீர்கள். உங்களது மனவலிமையையும் நம்பிக்கையையும் பலர் எம்மிடம் வியந்து கூறியுள்ளார்கள் ஐயா... மீண்டும் வழக்கறிஞராக நீதிமன்றம் செல்வேனென்று நீங்கள் கூறியபோது அது சாத்தியமாகுமென சிறு துளிகூட நாங்கள் நம்பியதில்லை ஐயா.....ஆனால் நீங்களோ அதையும் சாத்தியமாக்கி உங்களது இறுதிக்காலம் வரை நீங்கள் நேசித்த தொழிலை கைவிடாமல் அதிசிறப்பாகவே செய்து வந்தீர்கள் ஐயா...

சிறுவயது முதல் நீங்கள் போதித்த தர்மம், சமத்துவம், பல கதைகள் மூலமாக நீங்கள் கூறிய நீதி எனையும் தன்னிச்சையாய் முடிவுகள் எடுக்க வழிவகுத்தன. ஆனால் நீங்களோ உங்கள் குழந்தையாகவே நானிருக்க எண்ணினீர்கள். முதன்முறையாக என்னில் உண்மையான கோபம்... சில காலங்களிலேயே கோபம் மறந்து மீண்டும் உங்கள் குழந்தையாக எனை ஏற்றுக்கொண்டு எனைப் பெருமையுடனும் வாஞ்சையுடனும் மற்றோருக்கு அறிமுகஞ் செய்து வைக்கும்போது தந்தையாக நீங்கள் வென்றே விட்டீர்கள் ஐயா........

நீங்கள் சிவபக்தன். அதிலும் வல்வை வைத்தீஸ்வரனில் அதீத பக்தி. பதினொரு வருடங்களின் பின் அவனிடம் சென்று அவன்தாள் வணங்கி என்னதான் வேண்டினீர்களோ ஐயா?

காந்தீயத்தில் அதிக மதிப்பு கொண்டவர். இந்திய சரித்திரத்தை எமக்குச் சொல்லும்போது ஒவ்வொரு நிகழ்வுகளுடனும் தொடர்புபட்ட ஆண்டு, மாதம், தேதி, எண்ணிக்கை எல்லாமே சிறிதும் தவறாது ஞாபகத்தில் வைத்து சொல்வீர்கள். உங்களின் இறுதிக்காலம் வரை மறதி என்ற வார்த்தைக்கு இடமேயிருக்க வில்லை. உங்களின் அபார ஞாபகசக்தி இறைவன் தந்த கொடை. உங்கள் தொழிலில் நீங்கள் சிறந்து விளங்கியதற்கு அதுவும் ஒரு காரணமென்றால் மிகையாகாது.

உங்கள் தொழிலை மிகவும் நேசித்தீர்கள். வீட்டில் ஓய்வாக இருங்கள் என்று நாங்கள் எவ்வளவோ வற்புறுத்தியும் உங்கள் தொழிலை நீங்கள் கைவிடவேயில்லை. உங்களை நான் நினைக்கும் போதெல்லாம் நீங்கள் புத்தகம் வாசித்துக் கொண்டிருக்கும் தோற்றமே என் மனக்கண்ணில் எப்போதும் தோன்றுகிறது. உங்களது வாழ்க்கையின் பெரும்பகுதியை வாசிப்பிலேயே கழித்தீர்கள். நீங்கள் ஆடம்பர வாழ்க்கையில் ஈடுபாடு இல்லாதவர். அடிப்படை வசதிகளே போதும் என நினைனப்பவர். அதனால் தானோ என்னவோ இறுதிவரை எமக்காகவே உழைத்து சாதாரணமாகவே வாழ்ந்துவிட்டு சென்று விட்டீர்கள் ஐயா.... ஊர்ப்பற்று அதிகம் மிக்கவர். இறுதிவரை ஊரிலேயே வாழ வேண்டும் என்று விரும்பியது போலவே இருந்துவிட்டீர்கள் ஐயா.....

நீங்கள் அம்மாவைக் கிண்டல் பண்ணுவதும் அம்மா உங்களைவிட கணிதத்தில் பலமாயிருப்பதைக் கூறி நாங்கள் உங்களைக் கிண்டல் பண்ணுவதும் சகலமும் ஞாபகம் வைத்திருக்கும் நீங்கள் பிள்ளைகளின் வயதுகளை மட்டும் பிழையாகக் கூறுவதும் இனி எப்போது ஐயா...

எதிர்க்கருத்துக்களையும் பகிர்ந்து கொள்ளும் சுதந்திரத்தினை எப்போதும் எமக்குத் தந்திருந்தீர்கள். ஆனாலும் உங்கள் கருத்துக்களை எம்மால் ஒருபோதும் வெல்ல முடிவதில்லை. இது நீதிமன்றம் இல்லை ஐயா வீடு என நாங்கள் சொல்வதும் உங்களிடமிருந்து புன்சிரிப்பே பதிலாகக் கிடைப்பதும் இனி எப்போது ஐயா.....

ஒவ்வொரு வருடமும் விடுமுறைக்கு நான் வீடு வரும்போது உங்களுடன் கழித்த நாட்களை எண்ணி ஆறுதலடைகின்றேன். சிறுவர்களாக எம்மை நீங்கள் அழைத்துச்சென்ற ரேவடிக் கடற்கரைக்கு நான் உங்களை அழைத்துச் சென்றதும், நீங்கள் ரேவடிக் கடற்கரை பற்றிய உங்களுடைய பழைய நினைவுகளை என்னுடன் பகிர்ந்து கொண்டதும், Vision Care இற்குச் சென்றதும், நீங்கள் அங்கு மகிழ்வாகக் கதைத்துக் கொண்டிருந்ததும், கோப்பாயில் நாங்கள் உணவுச் சாலையில் சிற்றுண்டி சாப்பிட்டதும் நான் உங்களுடன் கழித்த இனிமையான இறுதிப் பொழுதுகள். வைத்தியரிடம் நான் உங்களை அழைத்துச் சென்ற பொழுதுகளும்

நீங்கள் என்னைப் பற்றிப் பெருமையுடன் கூறியதும், உங்கள் புத்தகங்களை நான் அடுக்கி வைக்கும்போது வருபவர்களுக்கு என்னைப் பற்றிப் புகழ்ந்து கூறியதும் மகளாக எனக்கு ஓரளவேனும் திருப்தியாய் இருக்கின்றது ஐயா.......

உங்களது இறுதிநாட்களில் அநேகமாக ஒவ்வொரு நாளும் உங்கள் வாயாடிப் பேர்த்தி ஆதுஷியுடன் கதைத்தீர்கள். 'ஆதுசி' என அழைத்து அவளிடம் English சொல்லித்தா என நீங்கள் கேட்பதும் பின் நீங்கள் அவளுக்கு புது வார்த்தைகள் சொல்லிக் கொடுப்பதும் இனி எப்போது ஐயா..... அவளுக்காக இந்தியாவிலிருந்து புத்தகங்கள் வாங்குவித்ததும் இனி இல்லையே ஐயா.......

பல இரவுகளும் தனிமையும் கண்ணீருடன் கழிவது உங்களுக்குத் தெரிகிறதா ஐயா?.......

விடுமுறை கழிந்து நான் விடைபெறும்போது இறைவனை வழிபட்டு என்னை வழியனுப்பும் நீங்கள் இம்முறை மாத்திரம் பதாகையில் புகைப்படமாக புன்சிரிப்போடு இருந்தீர்கள். மனம் தாங்கவில்லை ஐயா.........

நீங்கள் கண் கலங்குவது மிக மிக அரிது. இல்லவே இல்லை எனலாம். ஆனாலும் அப்பா, அப்பாச்சி, அச்சுப் பெரியையா பற்றிக் கதைக்கும்போது மாத்திரம் உங்கள் கண்கள் கலங்குவதை நான் அவ்வப்போது அவதானித்திருக்கிறேன் ஐயா. இப்போது நீங்கள் மிகவும் நேசித்த அவர்களோடு வானத்தில் தாரகையாக எங்களை ஆசிர்வதித்துக் கொண்டிருப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன்

**உங்கள் மகள்**

**ஜானகி அம்மன் (தாருணி)**

**REMENISCENCES of late Mr. SIVANARULSUNDARAM alias KAANDEEPAN (Attorney-At-Law) of SRI LANKA**

My late brother K.S.SIVANARULSUNDARAM was born on a Friday in 1948. His birth date coincided with the annual water cutting ceremony of Vallipuram Vishnu temple. That occasion has been known as Hanuman theertham (அனுமார் தீர்த்தம்).

As he was born on Hanuman's day our mother used to say that he would achieve feats like Hanuman. That was proved right when he achieved glories in the sportsfield. He represented in the volley ball, football and cricket teams of Valvai Chithambara College. He also won medals in the elocution contests held in Jaffna district among various schools and, he won medals in the provincial level contests too. In the field of athletics he captained one of the houses of Chithambara College.

In the long jump he obtained first place in the All Ceylon junior schools competition in the year 1965.

Apart from his outdoor activities, he was devoted son of his father. He venerated our father. My mother was more attached to him than other children. He also attached to our mother. Among our family members our youngest sister was in a poor condition materially. He helped her in all ways upto his demise. So also, he helped me to maintain my life.

One of the important characteristics of him was his lack of political ambition. But he had many friends among leaders of many different political parties. As a student of law he knew the micro and macro of political science. He never dabbled on local or national

politics.

He was a firm believer in Gandhian principles. He adored Gandhi but his hero was Pandit Jawaharlal Nehru.

His respect for Gandhism was such that he named his son after Vinoba Bhave. His son's name is Vinoba. Vinoba Bhave was known as the walking saint of India. In his walking tours he collected many plots/pieces of land from landowners and donated them to poor farmers. After Gandhi, my brother cherished, liked and worshipped Vinoba Bhave. He knew Boodan movement more than many others and used to lecture about Boodan and Vinoba Bhave.

But, God has taken him to his bosom to our grief.

May his soul rest in peace

**S. Sivasundaram**
Brother

# மனதில் இடம்பெற்ற மாணவன்

காண்டி, இது நான் உனக்கு இட்ட செல்லப்பெயர். இதில் எனக்குத் திருப்தி, உனக்கு மகிழ்ச்சி. 'சிதம்பரா' வில் நீ எல்லோரது கவனத்தையும் ஈர்த்த ஒரு நல்ல மாணவன். கல்வியிலா, விளையாட்டிலா, பேச்சாற்றலிலா, முதல் மாணவனாக விளங்கி மற்றைய மாணவர்களை நெறிப்படுத்தியதிலா, எதைச் சொல்வேன்! எல்லாவற்றிலும் நீ மிளிர்ந்தாய்! அத்தனை ஆசிரியர்களிடமும் பணிவுடன் நடந்து நல்ல பெயர் எடுத்தாய்!

பாடசாலைக்கு நேரத்தோடு வருவாய். நான் வந்ததும் ஓடி வந்து மலர்ந்த முகத்தோடு காலை வணக்கம் சொல்வாய். ஒரு நாள் மட்டுமல்ல. எந்நாளுமே! அதில் உனக்கு ஒரு மகிழ்ச்சி, எனக்கொரு திருப்தி. காரணம், நீ என் மனதில் இடம் பெற்ற ஒரு மாணவன்.

உன்னிடம் பணிவும் கண்டேன், பக்தியையும் கண்டேன். மகிழ்ந்தேன். நீ பக்தியோடு தானே இருக்க வேண்டும். காரணம் தெரியுமா? உன் பெயரைப் பார். சிவனருள்சுந்தரம். ஈசனின் அருள் உனக்கு என்றும் உண்டு என்பது அர்த்தம். சுந்தரம் என்றால் அழகு. உன் நெற்றியில் என்றும் காணப்படும் சிறிய விபூதிக் கீற்று உனக்கு புனித அழகையும் தந்து உன் பெயரை நிலை நிறுத்தியது.

காலம் மாறியது. நாம் கொழும்புக்கு வந்துவிட்டோம். ஒரு நாள் கொழும்புக்கு வந்த நீ, எங்கள் வீட்டிற்கும் வந்தாய். எனக்கும் மாஸ்ரருக்கும் அளப்பரிய மகிழ்ச்சி உன் விசுவாசத்தைக் கண்டு. நீ ஊரில் நன்கு தொழில் புரிகிறாய் என்று கேள்விப்பட்டு மகிழ்ந்தோம், பெருமைப்பட்டோம். ஆனால் உன் திடீர் மறைவை என்னால் ஜீரணிக்க முடியவில்லை.

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் உன் அன்பு ஆசிரியை,

**திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தம்**

# வல்வையின் ஓர் இழப்பு

வாழ்க்கையில் எல்லோருக்கும் தெரிந்த ஓர் உண்மை. மரணம் ஏற்படாத மனிதர்களோ அல்லது ஜீவராசிகளோ கிடையாது. ஆனாலும் ஒரு சிலருக்கு மரணம் வரும்போது ஏற்படும் துக்கத்தோடு ஒரு வெறுமையும் மனதிலே தோன்றுகிறது. அப்படிப்பட்ட ஒரு சிலரில் ஒருவர்தான் எனது உடன்பிறவாத்தம்பியும் நல்லதொரு நண்பனுமாகிய காண்டீபன் என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்ட சோமசுந்தரம் சிவனருள்சுந்தரம் ஆவார். இவருடன் எனக்கு நீண்டகாலப் பழக்கம். இவர் எனக்கு ஒரு மூன்றாண்டுகள் இளையவர். ஒரே பாடசாலையில் படித்ததாலும் இருவருக்கும் படிப்பிலும் விளையாட்டுகளிலும் மிகுந்த ஆர்வம் இருந்ததாலும் இருவரிடையேயும் நட்பு வளர்ந்ததில் ஆச்சரியமில்லை. அத்துடன் இவருடைய அண்ணன் அர்ச்சுனனும் நானும் ஒரே வயதுக்காரர். நாடகக்குழுவில் ஒன்றாக இருந்தோம். ஆகவே நான் அடிக்கடி அவர்களுடைய வீட்டிற்குப் போவதுண்டு. வயதுக்கு மூத்தவர் என்ற முறையில் காண்டீபனுக்கு விளையாட்டிலும் படிப்பிலும் நான் ஒரு வழிகாட்டியாக இருந்தேன். அவருடைய திறமைகளைக்கண்டு நான் வியப்படைந்துள்ளேன். விளையாட்டுத்திறமை அவரிடம் இயற்கையாகவே அமைந்திருந்ததோடு பயிற்சி எடுப்பதிலும் ஆர்வமாக இருந்தார். தேசியரீதியிலும் ஆசியத்தரத்திலும் ஓட்டப்பந்தயத்தில் சிறந்துவிளங்குவார் என நினைத்திருந்தேன். ஆனால் ஏனோ தெரியவில்லை பாடசாலை நாட்கள் முடிந்ததும் கடுமையான ஓட்டப்பயிற்சிகள் எடுப்பதைக் குறைத்துக் கொண்டுவிட்டார். அதிலே எனக்கு ஓர் ஏமாற்றம்.

படிப்பைப் பொறுத்தவரையில் அவர் மற்றைய மாணவர்களிடமிருந்து வேறுபட்டிருந்தார். பாடசாலைப் பாடங்களைப் படிப்பதிலும் பார்க்க பொதுவான புத்தகங்கள் வாசிப்பதிலேதான் அவருக்கு நாட்டம். அரசியல் (குறிப்பாக இந்திய அரசியல்),

இந்திய சுதந்திரப்போராட்ட தலைவர்கள், அவர்களுடைய வாழ்க்கை வரலாறு என்பனவில் அவருக்கு அதீத ஈடுபாடு. எனது தகப்பனார் ஒரு காந்தியவாதி. அவரும் காண்டீபனும் இந்தியத்தலைவர்கள், சுதந்திரப்போராட்டம் ஆகியவை பற்றி விவாதிப்பதைப் பார்த்து ரசித்துள்ளேன். காந்தி, நேரு, ராஜாஜி போன்ற தலைவர்களைப்பற்றிக் காண்டீபனுக்குத் தெரியாததேயில்லை.

வல்வை மண்ணின் மீது மிகுந்த நேசம் கொண்டிருந்தார். சமூகத்தை முன்னேற்றவேண்டுமென்பதில் ஆர்வம் கொண்டிருந்தார். தான் சொல்ல விரும்பியதை தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ கேட்பவர்கள் மனதிலே பதியும்படி சொல்லக்கூடிய ஆற்றல் படைத்தவர். இவ்வளவு அரசியல் அறிவு படைத்தவர், சமூக ஆர்வலர், பேசும் திறமை பெற்றவர் என்ன காரணத்திற்காக அரசியலில் ஈடுபடவில்லையென்றும், பொதுவாழ்க்கையில் ஈடுபட வில்லையென்றும் எனக்கு ஏமாற்றம். சமகாலத்தில் இருந்த யுத்த சூழ்நிலை காரணமாயிருக்கலாம். அல்லது அவருடைய துடிப்பான நேரத்திலே அவருக்கு ஏற்பட்ட வியாதி காரணமாயிருக்கலாம்.

பக்கவாதநோய் ஏற்பட்டு அவர் படுக்கையில் வீட்டில் இருந்தபோது 2011ம் ஆண்டு நான் பார்க்கச் சென்றிருந்தேன். மனது சங்கடப்பட்டது. இந்த நிலையிலிருந்து இவர் எப்படித்தான் மீண்டு வருவார் என்று யோசித்தேன். ஆனால் அவருடைய மன உறுதி அந்த நேரத்திலே அவருக்குக் கை கொடுத்தது. மனம் தளரவில்லை. கடுமையான பயிற்சிகள் எடுத்தார். எப்படித்தான் எழும்பி நடப்பாரோவென்று நினைத்த எல்லோரையும் ஆச்சரியப்படுத்தும் வண்ணம் பழையபடி தனது வழக்கறிஞர் வேலைக்குத் திரும்பினார். வழக்காடு மன்றத்திற்குச் சென்றுவந்தார். கடந்த சில வருடங்களாக நான் அவருடைய வீட்டிற்குச் சென்றபோதெல்லாம் அவருடைய வாடிக்கையாளர்கள் கூட்டம் நிரம்பியிருந்தது. அவருடைய சேவை சிறப்பாக இருந்தது. ஊரிலே Advocate என்று சொன்னால் அது காண்டீபனைத்தான் குறிக்கும். எவ்வளவுதான் வாடிக்கையாளர்கள் கூட்டம் இருந்தாலும் நான் போனால் என்னுடன் தான் கடைசியாகப் படித்த புத்தகங்களைப்பற்றி கதைக்காமல் இருக்கமாட்டார்.

2012ம் ஆண்டு எமது வீட்டிலே மாணவர்கள் வந்திருந்து

படிப்பதற்கான கற்றல் மையம் ஒன்றை ஆரம்பித்தேன். இந்த மையத்தை ஆரம்பித்து வைப்பதற்கு ஒருவரைத் தேடியபோது காண்டீபன்தான் என் மனதிலே வந்தார். அந்த நேரத்திலே அவர் ஓரிடமும் வெளியில் போவதில்லை. வருவதற்கு யோசித்தார். அவர் வந்து புத்தகங்கள் படிக்கவேண்டியதின் அவசியத்தை மாணவர்களுக்கு அறிவுறுத்தவேண்டுமென்றும், புத்தகங்கள் வாசித்ததால் உங்களுக்கு ஏற்பட்ட நன்மைகளையும் சொல்லவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டேன். தனது உடல் வலியையும் பொருட்படுத்தாமல் வந்தார். மாணவர்களுக்கு ஒரு பயனுள்ள சொற்பொழிவை ஆற்றினார். நீண்டநேரம் பேசினார். அந்தக் கற்றல் மையம் இன்றுவரை தொடர்ந்து சிறப்பாக நடைபெற்றுவருகிறது.

அவருடைய வீட்டிற்குச் சென்றபோது வீடு நிரம்ப புத்தகங்கள் இருப்பதை அவதானித்தேன். பல புத்தகங்கள் எங்கு தேடினாலும் கிடைக்காத அரும் புத்தகங்கள். இவை வீணாக்கப்படக்கூடாது. பொதுமக்கள் பிரயோசனம் பெறவேண்டும். அதற்கான வழிவகையைச் செய்ய வேண்டும்.

அவருடைய திறமைகள் பற்றி எனக்குத் தெரிந்திருந்த தாலேயே அவருடைய திறமையை இந்த ஊர் சரியாகப் பாவிக்கவில்லையே என்ற ஆதங்கம் எனக்கிருந்தாலும் மற்றும்படி அவருடைய வாழ்க்கை மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளை, அன்பான உறவினர்கள், நண்பர்கள் என்று சிறப்பாகவே அமைந்திருந்தது. அவரது பிரிவால் வாடும் மனைவி, பிள்ளைகள், குடும்பத்தார், நண்பர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.

**உடன்பிறவா அண்ணன்,**
**கலாநிதி சபா இராஜேந்திரன்**

## பல விளையாட்டுக்களில் சாதனைகள் படைத்த அமரர் சோமசுந்தரம் சிவனருள்சுந்தரம்(காண்டீபன்)அவர்கள்

நான் சிறுவனாக இருந்த காலத்திற்கு முன்னரே வல்வெட்டித்துறை விளையாட்டுக்களில் தனக்கென ஒரு இடத்தைப் பிடித்திருந்தது. அகில இலங்கை கரப்பந்தாட்ட ஓவகேம் (overgame) சுற்றுப்போட்டிகளில் பலமுறை சம்பியனாக வந்துள்ளது. அதன்பின்னர் செற்றப் கேம் (set-up game) ஆரம்பித்த பின்னரும் யாழ் மாவட்டத்தில் தலைசிறந்த அணிகளில் ஒன்றாக வல்வெட்டித்துறை இருந்து வருகிறது. கரப்பந்தாட்டம் போன்று உதைபந்தாட்டத்திலும் சிறந்த அணிகளில் ஒன்றாக இருந்து வருகிறது. அதுமட்டுமன்றி மெய்வல்லுனர் போட்டிகளிலும் வல்வெட்டித்துறை சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வருகின்றது. வல்வெட்டித்துறையின் இச்சிறப்புக்களுக்கு வல்வையின் விளையாட்டு ரசிகர்களின் ஆதரவும் ஊக்குவிப்புமே காரணமாகும்.

விளையாட்டுக்களுக்குப் பெயர் பெற்ற வல்வெட்டித்துறையில் யாழ் மாவட்டத்திலும் தேசிய மட்டத்திலும் குத்துச்சண்டையில் புகழ் பெற்றிருந்த திரு.சோமசுந்தரம் (பயில்வான்) அவர்களின் மகனான காண்டீபனுக்கு விளையாட்டில் ஆர்வம் வருவது என்பது புதுமையானதல்ல. அந்த வகையிலேயே தம்பி காண்டீபன் அவர்கள் படிப்பில் இருந்த கவனம் போலவே விளையாட்டிலும் சிறுவயது முதலே ஈடுபாடு கொண்டார். கைப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், மட்டைப்பந்தாட்டம், பூப்பந்தாட்டம், நீச்சல், கரம், மற்றும் டாம் என பல தரப்பட்ட விளையாட்டுக்களிலும் விளையாடி வல்வைக்கு பெருமை சேர்த்ததுடன் சாதனையாளராகவும் திகழ்ந்தார். இவர் கல்வி கற்ற சிதம்பராக்கல்லூரியில் நடைபெறும் மெய்வல்லுனர் போட்டிகளில் பங்குபற்றி தனது திறமைகளை வெளிப்படுத்தினார். உயரம் பாய்தல், நீளம் பாய்தல், முப்பாய்ச்சல், 100மீ ஓட்டம், 200மீ ஓட்டம், குண்டெறிதல் என்பன இவரின் விருப்பத்திற்குரிய விளையாட்டுக்களாக இருந்தன. 16 வயதிற்கு கீழ் உள்ள இடைநிலைப்பிரிவு, 19 வயதிற்குட்பட்ட மேற்பிரிவு, 19 வயதிற்கு மேற்பட்ட அதிமேற்பிரிவுகளில் சம்பியனாக வந்தார்.

அவரின் இத்திறமைகள் காரணமாக இவருக்கு கல்லூரியின் சிறந்த உதைபந்தாட்ட, கைப்பந்தாட்ட, மெய்வல்லுனருக்கான சிறப்பு விருதான கொலிஜ் கலர்(College Colour) வழங்கி கௌரவிக்கப்பட்டது. வல்வை புளூஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த சிலரே தேசிய மட்ட விளையாட்டுப்போட்டிகளில் விளையாடும் வாய்ப்பை பெற்றவர்கள். அவர்களில் முக்கியமானவராக தம்பி காண்டீபன் விளங்கினார். கொழும்பில் நடைபெற்ற தகுதிச்சுற்றில் நீளந்தாண்டுதல், 100மீ, 200மீ ஓட்டம் என்பவற்றில் தெரிவு செய்யப்பட்டு பின்பு சாதனையும் செய்தார். யாழ் மாவட்டத்தில் நடந்த மெய்வல்லுனர் போட்டிகளிலும், வல்வெட்டித்துறை நெற்கொழு மைதானத்தில் நடந்த மெய்வல்லுனர் போட்டிகளிலும் விளையாடி பல சாதனைகளைச் செய்தார். 1965 இல் வல்வெட்டித்துறை புளூஸ் விளையாட்டுக்கழகம் நெற்கொழு மைதானத்தில் நடாத்திய மெய்வல்லுனர் போட்டியில் காண்டீபன் அவர்கள் 20 அடி $8^{1}/_{2}$ அங்குலம் பாய்ந்து அப்பிரிவில் அகில இலங்கை பாடசாலைகளின் சாதனையை முறியடித்தார். மேலும் 100யார் ஓட்டத்தில் அப்பிரிவில் 10.8 செக்கனில் ஓடி முடித்து சாதனை படைத்தார்.

நான் விளையாடிய பல கரப்பந்தாட்டப் போட்டிகளில் தம்பி காண்டீபனும் இணைந்து விளையாடியுள்ளார். அவரின் விளையாட்டுத் திறமையைக் கண்கூடாக கண்டவன் நான். அவரது உடல்வாகு எந்த விளையாட்டையும் விளையாடக்கூடியதாக அமைந்திருந்தது. அவர் உயரத்தில் பாய்ந்து உயரத்தில் வைத்தே பந்தை அடிப்பதற்கும் எதிரணியினர் அடிக்கும் பந்தை எமது களப்பகுதிக்குள் வராது தடுப்பதற்கும் அவரது உயரம் பெரிதும் உதவியாக இருந்தது. அவரது மெலிதான உடலமைப்பு அவர் குனிந்து வளைந்து பந்தை அடிப்பது, பந்தை றிசீவ் பண்ணுவது என்பனவற்றிற்கு ஏதுவாக இருந்தது. எதிரணியினர் அடிக்கும் பந்துகள் அவருக்கு பல அடி தூரத்திற்கு முன்னால் விழ இருந்தாலும் அந்தப் பந்தை பாய்ந்து எடுத்து கைதட்டல் பெற்று விடுவார்.

கரப்பந்தாட்ட செற்றப் கேமை பொறுத்தளவில் அனேகமாக நாலு முறைகளிலேயே அடிப்பார்கள். சோட் (short) செற்றிங், ஹய் (high) செற்றிங், ரவல் செற்றிங், அற்றாக் லைனுக்கு வெளியில் வைத்து அடிப்பது என்பன. இந்த நான்கு முறைகளிலும் அடிக்கக்கூடிய திறமை அவரிடம் இருந்தது. இடது, வலது என இரண்டு கைகளாலும் பந்தை

அடிப்பார். இப்படி இரண்டு (இடது, வலது) கைகளாலும் பந்தை எல்லா கரப்பந்தாட்ட வீரர்களாலும் அடிக்க முடியாது. எதிரணியினர் அடிக்கும் பந்துகளை நெற்றுக்கு மேலேயே வைத்து தன் இரண்டு கைகளாலும் தடுத்து விடுவார். அவர் போடும் சேவிஸ் ஒருபக்க சுழற்சியுடன் எதிரணியினரின் எல்லைக்குள் வரும். அந்த சேவிஸின் சுழற்சி காரணமாக எதிரணியினர் அந்தப் பந்தை எடுப்பதற்கு திணறுவார்கள். வல்வை புளூஸ் விளையாட்டுக்கழகம் சார்பாக யாழ் மாவட்டத்தில் மாத்திரமின்றி இலங்கை பூராவும் உள்ள பல உதைபந்தாட்ட, கரப்பந்தாட்ட மைதானங்களில் விளையாடியுள்ளோம். ஆனால் நாங்கள் ஆமி, பொலிஸ், நேவிக் கோஸ்டிகளுடன் யாழ் மாவட்டத்தில் மட்டும் கைப்பந்தாட்ட ரூணமன்ற், சினேகபூர்வ ஆட்டங்களில் விளையாடியுள்ளோம். வல்வெட்டித்துறை ஆமி காம்ப், பலாலி ஆமி காம்ப் என்பனவற்றிற்கு அவர்களின் அழைப்பை ஏற்று சினேகபூர்வ கரப்பந்தாட்ட போட்டியில் தம்பி காண்டீபனும் விளையாடினார். அவர் தன் திறமை முழுவதையும் பிரயோகித்து அவர்கள் அடிக்கு மறு அடி கொடுத்தும், அவர்கள் அடிக்கும் பந்துகளை நெற்றுக்கு மேல் வைத்து தடுத்தும், எமது எல்லைக் கோட்டிற்குள் வரும் பந்துகளை றிசீவ் பண்ணியும், தூரவிழும் பந்துகளை டைவ் பண்ணி பாய்ந்து எடுத்தும் சுறுசுறுப்பாக விளையாடினார். போட்டி முடிந்து தேனீர் விருந்தின் போது ஆமிப்பெரியவர் காண்டீபனைக் காட்டி சின்னப்பையனாக இருக்கிறார், சுறுசுறுப்புடனும் மிகவும் சிறப்புடனும் விளையாடுகிறார், வருங்காலங்களில் இவர் இன்னும் சிறப்பாக விளையாடுவார், சிறந்த வீரராக வருவார் எனக் கூறினார். நாங்களோ, நம் இனத்தவரோ தம்பி காண்டீபனை பெருமைப்படுத்திப் பேசுவது, பாராட்டிப் பேசுவது என்பது வழக்கமானதே. ஆனால் இன்னொரு சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் தம்பி காண்டீபனை பாராட்டியது மனதுக்கு நெகிழ்ச்சியையும் சந்தோசத்தையும் கொடுத்தது. யாழ் மாவட்டத்தில் தம்பி காண்டீபன் விளையாடாத மைதானங்களே இல்லை என்ற அளவுக்கு அவர் வல்வை புளூசிற்காக விளையாடி வல்வெட்டித்துறைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

காண்டீபன் அவர்கள் சிதம்பராக் கல்லூரியில் படித்த காலத்தில் சிதம்பராக் கல்லூரி மைதானத்திலேயே பயிற்சிகள் நடைபெறும். கல்லூரியின் மைதானம் மிகவும் சிறியதாகவே இருந்தது. அத்துடன் மைதானத்தின் தென்கிழக்கு மூலையில் திட்டுத் திட்டாக மணல்

காணப்படும். அந்த இடத்தில் பந்தைக் கொண்டு ஓடுவது மிகவும் சிரமமானதொன்றாகும். நான் காண்டீபனுடன் எந்த உதைபந்தாட்டப் போட்டியிலும் ஒன்றாக விளையாடாத போதும் அந்த மூலை மண்ணில் விளையாடும் போது காலால் அடியும் வாங்கியிருக்கிறேன். அந்த மண்ணில் விளையாடும் போது அடிபடுவது சகஜம். சிதம்பராக் கல்லூரிக்காக இவர் விளையாடிய விளையாட்டுக்களைப் பார்த்திருக்கின்றேன். சிறந்த முன்னணி வீரராகத் திகழ்ந்த இவர் பந்தை முன்னோக்கிக் கொண்டு ஓடும் போது துரத்திப் பிடிப்பது கஸ்டமானதாகும். ஆனால் மற்றவர்கள் கொண்டு செல்லும் பந்துகளை இலகுவாகத் துரத்திப் பிடித்து பறித்து விடுவார். பந்தை தன் கட்டுக்குள்ளேயே வைத்துக்கொண்டு ஓடிச்சென்று இவர் அடிக்கும் பந்துகள் புலற் வேகத்தில் கோல் கம்பத்தை நோக்கிச் செல்லும்.

பற்மின்ரன் (பூப்பந்தாட்டம்) விளையாடுவதிலும் இவர் ஒரு சிறந்த வீரராகவே திகழ்ந்தார். வல்வை தெணியம்பை மைதானத்தில் நடந்த இரட்டையர்களுக்கான பற்மின்ரன் போட்டியில் காண்டீபன் இணை மிகவும் சிறப்பாக விளையாடி அரையிறுதி வரை முன்னேறியது. இவர்கள் இணை இறுதிப்போட்டிக்குத் தகுதிபெறும் அணியாக ரசிகர்களின் கணிப்பில் இருந்தது. சுண்டுக்குளி மகளிர் பாடசாலையில் யாழ் மாவட்ட அளவில் வை.எம்.சி.ஏ (Y.M.C.A)ஆல் நடாத்தப்பட்ட 40 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான பற்மின்ரன் போட்டியில் இரண்டாம் இடம் பெற்ற அருணாசலம் அண்ணா, கட்டி அண்ணா சோடியுடன் காண்டீபன் இணை மோதியது. காண்டீபன் அணியினர் துடிப்புடன் விளையாடும் இளைஞர்கள். அருணாசலம் அண்ணா அணியினர் அனுபவம் மிக்க விளையாட்டு வீரர்கள். சரியான போட்டி. போட்டியைப் பார்த்த அனைவரும் காண்டீபன் அணியைப் பாராட்டினார்கள்.

தம்பி காண்டீபன் அவர்கள் துடுப்பாட்டத்திலும் சிறந்த துடுப்பாட்டக்காரராக விளங்கியதுடன் சிறந்த பந்து வீச்சாளராகவும் திகழ்ந்தார். வேகப்பந்து வீச்சாளராகவும், சுழல் பந்து வீச்சாளராகவும் ஒரே நேரத்தில் திகழ்ந்தார். பீல்டிங் செய்வதிலும் சிறந்து விளங்கினார். எதிரணி துடுப்பாட்டக்காரரால் எத்தனை வேகமாக அடிக்கப்பட்ட பந்தாயினும், எத்தனை உயரமாக வந்த பந்தாயினும் அவர் எல்லைக்குள் வந்தால் அப்பந்தை இலகுவாக காச் பிடித்து விடுவார்.

தம்பி காண்டீபன் அவர்கள் விளையாட்டுத்துறையில் தொடர்ந்து முன்னோடியாக இருந்ததற்கு அவரது அயராத உழைப்பு, விடாமுயற்சி,

சக விளையாட்டு வீரர்களை மதித்து நடத்தல், மூத்த விளையாட்டு வீரர்களுக்கு மதிப்பளித்து நடத்தல் என்பனவும் காரணங்களாக விளங்கின. தொழில் ரீதியாகவும் இல்லாதவர்களை அரவணைத்து, அவர்களுக்கு ஆறுதல் சொல்லி, அவர்கள் கஸ்டங்களை உணர்ந்து, அவர்களுக்காகிய சில செலவுகளைத் தானே ஏற்று மனிதநேயத்துடன் நடந்து கொள்வார்.

"சைவம் வளர்வது வல்வெட்டித்துறையிலே" திருமுருக கிருபானந்த சுவாமிகள் கூறியது. அவர் கூறிய கூற்றிற்கு அமைவாக வல்வெட்டித்துறையில் கோயில் கொண்டருளியிருக்கும் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரர் கோவிலில் சைவம் வளர்வதையும், பக்தி வளர்வதையும் கண்கூடாகக் காணக்கூடியதாக இருக்கின்றது. திரு சோமசுந்தரம் (பயில்வான் அப்பா), அவர்தம் பாரியார் பரமநாயகம் அவர்கள், அவர்களது பிள்ளைகளான பழனி அண்ணா, அர்ச்சுனண்ணா, லெச்சி அண்ணா, மற்றும் தம்பி காண்டீபன், அவர்களின் பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் என குடும்பமே தலைமுறை தலைமுறையாக கோயில் தொண்டர்களாக, அடியவர்களாக இருந்து கோயில் வேலைகளைச் செய்து வருவது திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் கூறியதற்கமைவாகவே இருக்கின்றது.

தம்பி காண்டீபனின் மறைவு அவர் குடும்பத்தார் அனைவருக்கும் பாரிய இழப்பாகும். அதை நிவர்த்தி செய்ய எம்மால் முடியாது இருந்தாலும் அவர் குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறுகிறோம். பிறந்த போது தெரிந்த உண்மை "இன்று பிறந்த உயிர் என்றோ ஒரு நாள் இறைவனடி சேரும்".

சாந்தி! சாந்தி! சாந்தி!

நன்றி

**க.தேவசிகாமணி**
**(பொட்டு கட்டி அண்ணா)**

## சாதனை வீரன் காண்டீபன்

அருமை நண்பர் சோ.சிவனருள்சுந்தரம் ஓர் அன்பான வரலாற்று நதி....

இவரை காண்டீபன் என்றும் அழைப்போம். விளையாட்டு மைதானம் போர்க்களம் என்றால் வில்லுக்கு விஜயனான காண்டீபன் இவரேதான். அப்படி எல்லோரும் பார்க்கும் தனித்துவமும், வெற்றிச்சிறப்பும் நிறைந்த வீரர். இவருடன் சிவகுரு வித்தியாசாலை முதல் சிதம்பரா வரை ஒன்றாக படித்தது எனக்குப் பெருமை. அது மட்டுமல்ல அந்த உறவு அவர் நம்மை பிரியும்வரை தொடர்ந்தது.

அவரோடு பழகிய நாட்கள் பனியில் நனைந்த ரோஜா போல குளிர்மை நிறைந்தவை. அவர் பெருமையை எப்படி எடுத்துரைப்பதென எவருமே குழப்பமடைய வேண்டியதில்லை. அவர் தந்தையார் அவருக்கு சூட்டிய பெயரை மனதில் சிற்பமாக செதுக்கினால் நம் கண்முன்னால் வரும் அழகிய உருவம் தான் அவர். சுந்தரம் என்றால் அழகு. அதுவும் சிவனின் அருள் பெற்றால் எப்படியிருக்கும் என்று நினைத்தாலே போதும். அவர் பல்துறை ஆற்றலாளர். கால் பதித்த துறைகள் எல்லாம் புகழ் மிகு வரலாறாகத்தான் நிற்கிறார் என்பதை இந்த நேரம் பெருமையுடன் பதிவு செய்கிறேன். விளையாட்டு மைதானம் என்பது விதிகளால் எழுதப்பட்டது. அந்த விதிகளுக்குள் விளையாடும் போது மனிதன் வாழ்க்கை விதிகளையும் கற்றுவிடுகிறான். தான் பெருமையுடன் விளையாடிய மைதானம் போலவே வாழ்வையும் பெருமையுடன் நேசித்து அழகாக ஆடினார். தொடர் வெற்றிகளை மைதானம் போலவே வாழ்விலும் வெற்றிப்பதக்கங்களாக குவித்தார். இரு துறைகளிலும் வெற்றி பெற்ற ஒருவர்.

கரப்பந்தாட்டத்தில் இவரோடு இணைந்து பல புகழ் மிக்க

வெற்றி ஆட்டங்களில் ஆடியுள்ளேன். சிதம்பராக்கல்லூரிக்கு யாழ் மாவட்டத்தின் கரப்பந்தாட்ட சாம்பியன் வெற்றிக் கேடயங்களை நாங்கள் மூன்று தடவைகள் கொண்டு வந்தோம். அக்காலத்தே பாடசாலைகளில் சிங்கள மகாவித்தியாலயத்தை வெல்வது கடினம் என்பார்கள். ஆனால் நாமோ அவர்களை சிங்கள மகாவித்தியாலயத்தில் வைத்தே தோற்கடித்தோம். அத்தருணம் காண்டீபனின் ஆட்ட அழகு இன்றும் கண்களில் தேய்ந்து போகாத வண்ணப்படமாக ஓடக்காண்கிறேன். அகில இலங்கை ஆட்டங்கள் வரை எமது வெற்றிப் பயணங்கள் தொடர்ந்தன.

கரப்பந்தாட்டம் மட்டுமல்ல உதை பந்தாட்டம், தடகள விளையாட்டுப் போட்டிகள் என்று அவருடைய சாதனைகள் அத்தனை விளையாட்டுக்களிலும் மிளிர்கின்றன. ஓட்டம், தடையோட்டம், நீளம்பாய்தல் என்று பல போட்டிகளில் முத்திரை பதித்தார். வடமராட்சி போட்டிகள், பின் யாழ் மாவட்டம் என்று அகில இலங்கை வரை புகழ்க் கொடி நாட்டி சிதம்பராக்கல்லூரிக்கும், வல்வைக்கும் புகழ் ஈட்டித்தந்தார்.

அவருடன் விளையாடிய அக்காலத்தே பல போட்டிகள் தோல்வியின் விளிம்பில் நின்றபோது தனது திறமையால் ஆட்டத்தை வெற்றிப்பாதைக்கு திருப்பிய புகழ் வீரன் அவர். உயரமான கால்கள், மெல்லிய தோற்றம், அதற்கு மாறாக வலிமையான மனம், கொண்ட கொள்கையில் நிகரில்லாத உறுதி, எல்லாவற்றுக்கும் மேலாக வெற்றியை நேர்மையான வழிகளில் மட்டுமே பெறவேண்டுமென்ற பிடிவாதம் அனைத்தும் கொண்ட பண்பாளர். இவரைப் போன்ற ஒருவரை இன்றுள்ள உலகில் தேடுவது அரிதிலும் அரிது.

படிக்கும் காலத்தில் ஆங்கிலத்தில் விருப்பு கொண்டவர், சட்டத்துறையில் சாதிக்க வேண்டும் என்ற துடிப்புடன் இருந்தார். கல்வியிலும் விளையாட்டை போலவே சாதனை படைத்தார். விளையாட்டில் கடைப்பிடித்த அதே நேர்மையை தன் தொழிலிலும் கடைப்பிடித்தார். ஒரு சிறந்த விளையாட்டு வீரனால் தொழில்களும் பெருமை பெறும் என்று துணிந்து கூறுவேன். அதற்கு அருமை நண்பர் சிவனருள்சுந்தரமே சிறந்த சாட்சியாகும்.

தனது அன்பு மனைவியாருக்கும், குடும்பத்தினருக்கும், ஊருக்கும், தமிழினத்திற்கும் பெருமை தரும் வாழ்க்கையை வாழ்ந்து

விடைபெற்றுள்ளார். 'தோன்றில் புகழுடன் தோன்றுக' என்ற வள்ளுவர் வாசகத்திற்கு அமைய தோன்றிய இடமெல்லாம் புகழ் வீரனாகத் தோன்றினார். இன்று மறைந்தாலும் மறையாத புகழ் நட்சத்திரமாக வானில் மின்னுகிறார்.

எப்படி பாரதக்கதையில் காண்டீபனை மறக்க முடியாதோ அதுபோல வல்வையின் கதையில் மறக்க முடியாத காண்டீபனே அவர். அதோ தெரிகிறது விளையாட்டு மைதானம், அங்கே வெற்றி வீரனாக அவர் ஓடிக்கொண்டிருக்கக் காண்கிறேன். அன்பு நண்பனுக்கு என் புகழ் வணக்கங்கள்.

**ஏ.எஸ்.ஜெயபாலசிங்கம்**
கனடா

## தந்தை பயில்வான் சோமசுந்தரம் போல் வல்வெட்டித்துறை மண்ணுக்கு வரலாறும் வாசமும் தந்தவர் நீங்கள்

வல்வெட்டித்துறை யா/சிதம்பரக்கல்லூரியின் வருடாந்த விளையாட்டு விழாவில் அணி நடைக்கு முன்பாக கல்லூரியின் கொடி ஏந்தி வந்து சத்தியப்பிரமாணம் செய்த அற்புதக்காட்சி எமது ஊரின் விளையாட்டுத் துறையை நேசித்தவர்களின் மனங்களில் இன்னும் பசுமையாக இருக்கின்றது. கல்லூரியின் விளையாட்டுப் போட்டி முடிந்த பிற்பாடு வரிசையாக கழகங்களின் விளையாட்டு விழாக்கள் ஆரம்பமாகிவிடும்.

கல்லூரி வாழ்க்கையில் கைப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், கிரிக்கெட், குறுந்தூர ஓட்டம், சாரணர் என்று பன்முக விற்பன்னராக நீங்கள் வாழ்ந்த உங்கள் காலத்தை வல்வையின் வரலாறு கௌரவமாக பதிந்து வைத்திருக்கிறது.

வல்வெட்டித்துறையின் நெற்கொழு மைதானத்தில் மற்றைய விளையாட்டு வீரர்களும் கிரமமாக நாள் தோறும் பயிற்சி பெற்ற காலத்தில், சிதம்பராக்கல்லூரியில் இருந்து யாழ்மாவட்டத்திலும் தெரிவாகி கொழும்பு வரை சென்று ஊர் மண்ணுக்கு பெருமைகள் சேர்த்த ஒரு பொற்காலத்தில் வாழ்ந்த உங்களை உங்கள் தந்தை பயில்வான் நாமத்துடன் வல்வெட்டித்துறை மண்ணின் வரலாறு மாவீரனாக வரைந்து கொள்கின்றது.

விளையாட்டுத்துறையில் அன்பாக, பண்பாக பேசி எல்லோரையும் அரவணைத்துச் செல்லும் வல்வெட்டித்துறை மக்களின் உயர்ந்த பண்புகளில் ஒன்றாகி இன்றைய நட்புக் குழுக்களின் முன்னோடிகளில் ஒருவராக நீங்களும் திகழுகிறீர்கள்.

வல்வெட்டித்துறை மண்ணுக்கும் விளையாட்டுத்துறைக்கும் பெருமையும் வரலாறும் தந்த சகோதரர்களுடன் பிறந்து வாழ்ந்த குடும்பமாக உங்கள் குடும்பமும் நீங்களும் விளங்குகிறீர்கள்.

வல்வெட்டித்துறை சிவன் கோயிலில் எல்லா விசேட காலங்களுக்கும் தந்தையாருடனும் சகோதரங்களுடனும் செய்த சிவதிருத்தொண்டுகளும் உங்கள் வாழ்வின் பொற்காலம். இவை போன்று வல்வெட்டித்துறையின் இளைய சமுதாயம் உங்களிடம் கற்றவை ஏராளம்.

வல்வெட்டித்துறையில் பலர் பிறந்து இறந்து போய் உள்ளார்கள். இவ்வேளையில் வல்வெட்டித்துறையில் **வாழ்ந்தவர்கள்** வரிசையில் உங்களை வரிசைப்படுத்தி உலக வல்வெட்டித்துறை ஒன்றிய சமூகம் ஆழ்ந்த கண்ணீருடன் வீர அஞ்சலி தந்து விடை கொள்கின்றது.


புலம்பெயர்ந்த வல்வெட்டித்துறை மக்கள் சார்பில்
**சோ.செ.தெய்வச்சந்திரன்.**
**இங்கிலாந்து.**

**இவ் நினைவுக் கட்டுரை www.valvettithurai.org இல் 09.03.2020ம் திகதி பிரசுரிக்கப்பட்டது.**





# சிதம்பரக் கல்லூரியுடன் ஐயாவின் பயணம்...

# As a Record Breaking Athlete



Triple Winner in Vadamaradchi - 1965 & 1966
Triple Winner in Jaffna Schools - 1965 & 1966
Triple Winner - All Jaffna record holder - 1965
All Ceylon Public School winner Long Jump - 1965


சாதனைகள் பல புரிந்த
விளையாட்டு வீரனாக..




Vadamaradchy Champions from 1961 - 1966
All Jaffna Champions from 1964 - 1966

உயர்தர மாணவர் மன்றத் தலைவராக (1969)



# வருடாந்த மெய்வல்லுனர் போட்டிக்கு
# பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த போது (2004)





## வருடாந்த மெய்வல்லுனர் போட்டிக்கு
## பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்த போது (2004)





# An appreciation

Somasundaram Sivanarulsundaram was a student of mine at Law College around 1975 or so. He took oaths in 1977. A gentleman to his fingertips he was one whom I recognized as a man of ***satvic*** qualities. He was a firm believer in Gandhian principles.

I was sad to hear of his demise on 7/03/2020. I had lost touch with him after Law College days since I joined the Judiciary in 1979 but used to meet him on and off in Jaffna or in Colombo. He would come running on seeing me and wish me well. I too would be happy to speak to him. He used to practice in Point Pedro Courts mainly but going also to Chavakachcheri, Mallakam, Jaffna, Kilinochchi and Mullaithivu.

He maintained a good physique. I was told he was a good sportsman having excelled in athletics, volleyball, soccer, cricket and badminton.

His athletic record was excellent. Triple winners in Jaffna schools in 1965 and 1966 holding All Jaffna record in 1965.

I believe his batch mate at Law College was the late Lawyer Surendran of Chavakacheri. Mrs.Rupa Surendran also a student of mine, is now in our Party's Central Committee. For a Lecturer who had come across very boisterous, humourous as well as brilliant students Sivanarulsundaram was the "good" student, soft and religious.

His questions in class never did pose any problem because they were straight forward. There were others whose questions were calculated to embarrass me! All in all, I miss all my students boisterous and gentle. Sivanarulsunderam was gentle.

He was a pleasant conversationalist. I am sad such young lawyers are leaving us while old people like us are still lingering on.

May Sivanarulsundaram reach Lord Shiva's feet and be in eternal Peace.

**Justice C.V.Wigneswaran**

# The Siva I knew

Kathirippillai Somasundaram Sivanarulsundaram, Attorney-at-Law, a proud son of Valvettiturai, is someone I would pay tribute to as a brother in the mission to administer justice, a fine lawyer – a true, just and faithful servant of the law.

A product of Chithampara College, Valevettiturai, the suave, dapper and handsome young Siva was admitted to Sri Lanka Law College in 1974. He was called to the Bar as an Attorney-at-Law of the Supreme Court of Sri Lanka in 1977. He wasted no time in returning to Valvettiturai to serve the community in the North notwithstanding the ravages of the conflict that was to unfold its ugly head in the years that followed.

Siva practiced in the Point Pedro, Mallakam, Chavakachcheri, Kilinochchi & the Mullaitivu courts, and rose to the stature of an eminent lawyer in a short period of time during which he developed a lucrative legal practice. Siva had his well-wishers and detractors, but our vintage of law students and lawyers who loved him and knew him well, who saw him grow from a law student to a young Attorney enamored with the romances of the law, have nothing but awe and admiration for such a passionate, energetic and hardworking legal practitioner .

Siva was a man of the law, a servant of the community , and a very good father to his children Tharunie an Engineer by profession, Vinoba a final year law student who follows in the footsteps of his father and Preetha who is a graduate from the University of Jaffna. He was a good husband to his wife Saraswathy retired Assistant Regional Manager of the People's Bank Jaffna, and a true friend to all of us. I have known Siva for long years, and I am sure that my colleagues associate themselves with me in

confirming that those of us who truly knew him had nothing but good words for him. Siva was a lawyer who appeared for his clients and went beyond the call of duty. He was a paragon of honesty, dedicated to whatever he undertook and essentially a people-oriented personality. He was approachable to the poorest of the poor. He was well loved and well appreciated by the community at large. His illness which finally took the toll of him, did not discourage him from maintaining a keen interest in the law. He was an accomplished lawyer, with a passion for the law and a fine personality with the necessary energy and enthusiasm to deliver the law at its best to the members of the community.

Siva had the rare capacity to multitask as a lawyer. He was known as a lawyer who would listen to the many problems presented by his clients, his constituents and his friends. I am aware that Siva never closed his doors to the disadvantaged, the unlettered, and the vulnerable. He was an Attorney of the masses. As the one time Attorney General and Chief Justice, I have learnt that Siva espoused his client's cause with unrelenting zeal in the court room, flawless in his pleadings and manifestations, but at the same time courteous to court personnel, respectful to judges and fair to his opponents.

He was a great proponent of the rule of law. I recall with special gratitude the day I declared open the new Chavakachcheri Court Complex, when Siva, notwithstanding his illness, was there with me to lend me the necessary support and encouragement on that very important day. On a personal note, it was reassuring that I had such a close friend in Siva who notwithstanding the physical discomforts and disability, was there to support me in my work as Chief Justice.

Siva, you will always be in our thoughts as a true friend, a great Attorney and an icon of a professional from whom the young Attorneys could draw inspiration.

The supreme irony of creation is that all of us must pass away inevitably. It is not the length of our years, but the quality of the work that we render as professionals that would be left behind as our legacy. Siva undoubtedly left an indelible mark of the legacy of a true professional. I would therefore venture to record his passing, if I was to put it in Siva's words, "an innings well played, and a fitting finale". His was a life that can be remembered as one that contributed in a substantial manner to the life of the community, and for that singular reason we can thank God for the wonderful free gift of life that was given to us in Siva.

Siva you have passed to the great beyond in which you will be richly rewarded for the good life you led during this earthly sojourn as a true friend, a loving father, a faithful husband, a good lawyer and a great son of our nation.

**Mohan Pieris**
Presidents' Counsel
Former Chief Justice of the Supreme Court of Sri Lanka
Attorney General (Retd)
Permanent Representative of Sri Lanka to the United Nations



சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் எடுத்த போது (1977)

## காண்டீபம்

மூத்த சட்டத்தரணி கதிரிப்பிள்ளை சோமசுந்தரம் சிவனருள்சுந்தரம் மறுபெயர் காண்டீபன் அவர்கள் அமரர் ஆகிவிட்டார். நம்பவே முடியவில்லை. எனினும் 07.03.2020 அன்று கிடைத்த பேரிடியான செய்தி அதனை ஏற்கவேண்டிய நிலையை ஏற்படுத்தி உள்ளது. அன்பர் சிவனருள்சுந்தரம் அவர்கள் அமரத்துவம் அடைந்துவிட்டார். அவர்களுக்கு எனது அஞ்சலிகளும் அவர்கள் உறவுகளுக்கு எனது ஆறுதல்களும்.

வில்லுக்கு விஜயன் அருச்சுன மகாராஜன். அவரது சிறப்பு காண்டீபமே. சட்டப்புலத்திலே காண்டீபமாக விளங்கியவர் மூத்த சட்டத்தரணி சிவனருள்சுந்தரம் அவர்கள். வடமராட்சியில் சட்டவளத்திலே பாரிய குறைவு ஏற்பட்டுள்ளது என்பதில் மாற்றுக்கருத்திற்கு இடமில்லை.

மிலேனியத்தின் ஆரம்பகாலத்தில் பருத்தித்துறை நீதி மன்றங்களில் வளர்பிறைச் சந்திரனாக வழக்கு பேசியமை ஞாபகத்திற்கு வருகின்றது. சட்டத்தரணி சிவனருள்சுந்தரம் பரந்த பொது அறிவினைக் கொண்டு வழக்குகளில் அதனை சிறப்பாக பிரயோகித்தார். பின்னர் நான் வேறு இடங்களுக்கு மாற்றலாகி சென்ற நிலையில் தொடர்புகள் அற்று இருந்தது. 2014ம் ஆண்டிலே அப்போதைய சிறிலங்காவின் பிரதம நீதியரசர் அவர்கள் தமது யாழ் விஜயத்தின் போது அடையாளம் சொல்லி அவரைத் தேடி சட்டத்தரணி சிவனருள் சுந்தரத்தை தனது கல்லூரி நண்பர் எனத் தெரிவித்து அவருடன் கலந்து மகிழ்ந்தமை எனது ஞாபகத்திற்கு வருகின்றது.

அண்மைக்காலங்களில் உடல் வளத்திலே குறைவுகள் ஏற்பட்டு சிரமங்களுக்கு மத்தியிலும் நீதிமன்றங்களில் தோன்றி வழக்குகளை நடாத்தி வந்தார். இறையடி சேர்வதற்கு ஒரு வாரத்திற்கு முன் என் முன்பாக வழக்கு பேசி அவருக்கு சார்பான கட்டளையை பெற்றிருந்தமை மனதில் அப்படியே பதிந்துள்ளது.

அன்பர் மூத்த சட்டத்தரணி கதிரிப்பிள்ளை சோமசுந்தரம் சிவனருள்சுந்தரம் அவர்கள் நிச்சயம் சிவகதி அடைந்திருப்பார். அவரது ஆன்ம ஈடேற்றத்திற்கு எல்லாருக்கும் பொதுவான இறைவனை யாசித்து அனைவருக்கும் ஆறுதல் தெரிவித்து அமைகின்றேன்.

**அன்னலிங்கம் பிரேம்சங்கர்**
மாகாண மேல்நீதிமன்ற நீதிபதி
யாழ்ப்பாணம்

# சிவனருள்சுந்தரம் சிவன் தாள் சேர்ந்தார்

நான் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்த காலத்தில் பருத்தித்துறை நீதிமன்றில் காண்டீபன் என்பவர் சட்டத்தரணியாக பணியாற்றிவருகிறார் என்று அறிந்திருந்தேன். நாட்டில் ஏற்பட்ட சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்டு வன்னிக்கு இடம் பெயர்ந்து, மீண்டும் வல்வெட்டித்துறைக்கு வந்துவிட்டார் என அறிந்தபோதும் அவரை என்னால் 2013 வரை நேரில் சந்திக்கக் கிடைக்கவில்லை. யாழ்ப்பாணத்தில் நடந்த யாழ் சட்டத்தரணிகள் சங்கத்தினால் நடாத்தப்பட்ட கருத்தரங்கில் கைத்தடியுடன் ஒரு ஜொலிப்புடன் சட்டத்தரணி வந்திருந்ததை அவதானித்து அவரிடம் சென்று என்னை அறிமுகப்படுத்தி அவர் யாரெனக் கேட்டபோதுதான் காண்டீபன் என அழைக்கப்படும் சட்டத்தரணி சிவனருள்சுந்தரம் என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். அன்றிலிருந்து எங்களுக்கிடையே நட்பு உருவாகியது.

தன்னம்பிக்கை, விடாமுயற்சி, மனத்தைரியம் என்பவற்றைக் கொண்டுள்ள ஒரு மனிதராகவும், சட்ட ஆலோசனை வழங்கும் ஆசானாகவும், குடும்பத்தின் மேல் அன்பு வைத்திருக்கும் அன்புக் கணவனாகவும், பாசம் மிகுந்த அப்பாவாகவும் நான் அவரை அவதானித்திருக்கின்றேன்.

"Reading makes a perfect man" என்பதைத் தனது தாரக மந்திரமாகக் கொண்டு வாழ்ந்து வந்தது மட்டுமல்ல புத்தகங்கள் வாங்கி அதை ஆர்வத்துடன் வாசித்து அதை மற்றவர்களுக்கும் போதிக்கும் ஒருவர். அவர் திடீர் சுகவீனமுற்று இறைவனடி சேர்ந்துவிட்டார். அவரை இழந்து தவிக்கும் மனைவி, பிள்ளைகள் எல்லோருக்கும் எனது ஆறுதலைச் சொல்லி சிவனருள்சுந்தரம் சிவன் தாள் இருந்து எல்லோருக்கும் ஆசிகள் வழங்குவார் என்று நம்புகின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**திருமதி ஜோய்மகிழ் மகாதேவன்**
இளைப்பாறிய நீதிபதி

## நீதித்துறையில் கோலோச்சிய நண்பன்

உலக வரைபடத்தில் என்றுமே அழியாத இடத்தைப் பெற்ற புகழ்பூத்த வல்வை மண், அரைநூற்றாண்டுகள் நீதித்துறையில் கோலோச்சிய மைந்தனை இழந்துவிட்டது! நீதித்துறையின் "காண்டீபம்" ஓய்ந்து விட்டது.

நான் எனது கல்லூரி தோழனை, சட்டத்துறையில் எனது சகாவான சிவனருள்சுந்தரத்தை இழந்துவிட்டேன். சட்டக்கல்லூரியில் காலடி எடுத்து வைத்த நாள்முதல் புலம்பெயர்ந்து வந்த பின்னரும் தொடர்பு அறாமல் இருந்த எனது நண்பனின் தொடர்பு அறுந்துவிட்டது.

இரு தலைமுறைகளாக எங்கள் இரு குடும்பங்களும் கொண்டிருந்த பிணைப்பு முடிவுக்கு வந்துவிட்டது. இவர் தந்தையார் பயில்வான் சோமசுந்தரமும் எனது தந்தையார் நடராசாவும் கொண்டிருந்த நட்பு எங்கள் காலத்திலும் தொடர்ந்து கடந்த வருடம் தொலைபேசி உரையாடல்வரை தொடர்ந்து இருந்தது.

அவர் மறைவுச் செய்தி என்னை ஆழ்ந்த துயருக்குள்ளாக்கி விட்டது. ஒரு தலைசிறந்த விளையாட்டு வீரனாக, மெய்வல்லுனராக, அறிவுசால் நண்பனாக, மாயவ பக்தனாக, சக சட்டத்தரணியாக எங்கள் பந்தம் தொடரக் காரணம் அவர் "பணிவு"தான். "பதவி வரும்போது பணிவு வரவேண்டும்" என்ற வாக்கியத்திற்கு வரைவிலக்கணமாக வாழ்ந்த உன்னத ஆத்மா அவர்.

நீதிமன்றில் கனிஷ்ட சட்டத்தரணியாக பதவிப்பிரமாணம் எடுத்து பருத்தித்துறை நீதிமன்றுக்கு தொழில் புரிய வந்த வேளை அவர் சிரேஷ்ட சட்டத்தரணிகளிடம் பெற்ற ஆலோசனைகள் அவர் சட்டத்துறையில் பிரகாசிக்க வழிவகுத்தன. என்றுமே இனிய முகம், இன்சொல் தவிர வேறு வார்த்தை பேசி அறியமாட்டார். நீதிபதிகளிடமும் சக சட்டத்தரணிகளிடமும் அவர் காட்டிய பரிவு, பணிவு, அவரை நீதித்துறையில் ஒரு உதாரண புருஷனாக்கி உயர்நிலைக்கு இட்டுச் சென்றது.

அவர் இழப்பு வல்வை மண்ணிற்கும் நீதித்துறைக்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பு. அவர் பிரிவால் துயருறும் மனைவியார், குழந்தைகள் மற்றும் குடும்பத்தினரோடு ஒரு நண்பனாக, சக சட்டத்தரணியாக நானும் எனது குடும்பத்தினரும் பங்கு கொண்டு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம். அவர் ஆத்மா சாந்தி அடைவதாக!

"ஓம் சாந்தி"

**நடராஜா கிருஷ்ணராஜா**
Attorney - at - law (Srilanka)
Solicitor (England and Wales)


அனுபவம் மிகுந்த
சட்டத்தரணியாக..

## APPRECIATION –KATHIRIPPILLAI SOMASUNDARAM SIVANARULSUNDARAM (KAANDEEPAN)

*"Let us be true: this is the highest maxim of art and of life, the secret of eloquence and of virtue, and of all moral authority".*

**- Henri Frederic Amiel -**

I absolutely consider writing this eulogy a great privilege given to me by the family members of Late Somasundaram Sivanarulsundaram. Friends in my age and I always fondly called him Kaandy Uncle. In my case, merging of our bloodlines has proudly made the term "Uncle" very fitting and, therefore, I am particularly proud about it.

Kaandeepan Uncle was an amicable person who had the ability to mingle with people from all walks of life. He was such a personality who could keenly engage himself in a cordial manner with elders and youngers. He inherently possessed a friendly disposition that was an asset to him always and it, certainly, made him a distinct personality among his peers. He was an avid reader of books of different genres and he invariably set a good example for the younger generations to prove the fact that "Reading makes a person perfect".

Personally, I had the great opportunity to know Kaandeepan Uncle in my younger days through his warm rapport with my father, his cousin,R. K. Rajavel who was one of the former Independent Council Members of Urban Council of Valvettithurai in the early 70s. Kaandeepan Uncle had the habit of visiting us during his jogging sessions in the countryside of Urikkadu and Kadduppulam whenever his time permitted him to do so. He and my father were used to engaging themselves in deep discussions,

*inter alia*, mostly on contemporary issues related to society and its developments at our grape farm in the evenings. However, the crux of the matter is none other than my observations on Kaandeepan Uncle's unique style of discussing distinct topics, competency in delivering his arguments in a logical sequence and ability to put forward his candid opinion succinctly. I am sure their discussions should have laid many things into my subconscious mind in a good order for the benefit of tracing my path in my career in a later stage, though at that time I was merely an observing child in his adolescent and not a passive participant in their discussions.

In fact, he innately had all the excellent qualities and good character to become a professional in his career. He had aptly chosen Law as his profession for the benefit of the community in which Lawyers have traditionally been a rare species, even today. Perhaps, this was one of the reasons for encouraging his son Vinoba to study Law. It is remarkable to note that his wife Mrs. S. Saraswathy, a retired Banker, and him had put all their efforts to educate their three children (Tharunie, Vinoba and Preetha) in various higher learning institutions in Sri Lanka, Australia and the United Kingdom in various fields such as Engineering, Law and Management. I am sure this success have been achieved not by luck but hard work by him and his better half.

I had the pleasure of meeting Kaandeepan uncle again after my graduation as Civil Engineer when I returned home from India after the demise of my father in late 80s. That time, I had an ample opportunity to engage myself in discussing various topics with him as an adult. His wider knowledge on international matters and his professional experience immensely enthused me when he was telling me about UN Charter and UN Convention of Law of Sea. Our discussion created a desire to know many matters outside of engineering discipline. In fact, I have been continuously quenching that thirst to enhance my general

knowledge. Indeed, it is impossible for me to find adequate words to express my gratitude to Kaandeepan Uncle in this respect. Easily, he could have been one of the Principals of a Think Tank had he practiced his profession in a First World Country. But, he had chosen to serve the people of his Motherland for their benefit.

My script would not be complete without mentioning the great achievements and records Kaandeepan Uncle had made in Sports. He greatly excelled in Sports during his younger days. I could believe when said by others that the entire sports circle of Jaffna knew his charismatic leadership qualities and his ability to command respect even among his opponent team members. Indeed, many Champion Medals collected by him in various sports events held in district wide and all Ceylon level had brought fame to his *Alma Mater* J/Chithambara College, Valvettithurai. The glory of his accolades can be cherished for life by all alumni of J/Chithambara College.

May I pray the almighty to give strength, endurance and resilience to his family and loved ones to overcome his demise. The only consolation for all of us now is that he is in a better world.

Certainly, K. S. Sivanarulsundaram (Kaandeepan)would be remembered as one of the finest sons of Valvettithurai forever.

**By Krishnasamy Rajavel Inbarajan**
Nephew

## WHERE THERE'S A WILL, THERE'S A WAY!

This is the best known proverb for determination, but I saw a living example for the above- mentioned proverb. Yes! It is Kaandeepan uncle (this is how I address him). He wasn't just known for determination, he also gave me hope and courage when I needed the most. So I am gonna go back down the memory lane...!!

In the year 2015, is when I first saw him. It was unbelievable to trust my eyes. How can a man be crippled yet so strong mentally and stubborn at his will power??? It takes a lot of courage to be like him. There are many people who come across your life every day but only a few remain unforgettable. He is one of that kind to me!!!

As I mentioned earlier, he served as a lighthouse for me during my toughest period of life. He taught me life lessons during our conversation which we had in the past and I'm very grateful for that. Some of his traits/characteristics/qualities of him which I would like to mention here are, he is a 1. Motivator 2. Good reader 3. In- depth of knowledge about life and his field of work 4. Confidence 5. Being Considerate and most of all 6. Respect for Women.

So to begin with,

1.**Motivator**

He has motivated me whenever I was down, he has given me hope. The amount of trust he had in me got me to realise what I was worth for. Lot of inputs, suggestions, advice he would give on the subject matter we had dealt with whenever I saw him. I go

to him with a lot of confusion and questions but he doesn't speak a word about the problems but the solutions, it will only make me realise who I really am??

**2.Good reader**

I am deeply saddened to explain this because the last time I spoke with him was about a book which he wanted. He is just not a regular reader who reads books, but he keeps him updated every time when he reads and he never forgets about it. He remembers each and every book he reads. Not only the book but he remembers the authors, edition and publication details as well. One of the inspiring qualities of him.

**3. In-Depth Knowledge**

Oh my god! his astonishing quality! he has in-depth knowledge of whatever he is dealing with. He can talk about anything and everything. He is not just a random speaker, he knows what he is talking and to whom he is talking. He never underestimates the person before him, he gives you maximum information to clarify your doubts and questions. He also gives me ideas and books too to expand my knowledge. Not only developing his knowledge but he shares his knowledge too.

**4.Confidence.**

This quality which I am developing but people who have come across him would know he is full of it. With such confidence, everything seems to be small for him. Anything is possible. Yes of course nothing is impossible. Not just like that he would attain but he really puts in a lot of hard work and he knows best how to achieve it.

**5. Being Considerate.**

In a world which we live in, we don't care or think about others, but he does. He studies each and every person he meets and come

across. He knows what exactly we are looking for in our puzzled faces. He puts himself in our shoes and gets going about it. He gives people time to talk and listens to them patiently, I think the most important quality for his profession and he was just doing it very well.

Oh here comes this, which I like the most in him is **Respect for Women.** Being a woman, it was so overwhelming when someone respects you. Being in such a stage and age of his life, he would have easily ignored, he didn't do. Not just the respect but he equally treats them. Not only me, but all the women in his life. He does not underestimate the power of women and the capacity of them.

One of the truly amazing heroes of mine ever!!!

I take this opportunity to thank his daughter Ms.Tharunie and Mrs.Sivanarulsundaram and Family who have given me the chances to pay my final tribute to Kaandeepan uncle!!!

**Sangeetha Raveenthirathas**

# வல்வையின் கலாசாரத்தைப் பேணிய காண்டீபன் அண்ணா

காண்டீபன் அண்ணாவின் நினைவலைகளில் முதன்மையானது வல்வெட்டித்துறை மக்களின் வாழ்வியலுடன் பின்னிப் பிணைந்த கலாசாரமும் பண்பாடும். நாம் எமது சமுதாயப் பண்பாடுகளில் தாய், தந்தை, மூத்தோர், குரு, சிவாச்சாரியார்களுக்கு வழங்கும் கௌரவம் பிற ஊர் மக்களால் இன்றும் வியந்து பார்க்கப்படுகின்றது.

என்னை சிறுவயது முதல் ஒரு சிறிய புகைப்படக் கலைஞனாக வல்வெட்டித்துறை மக்கள் ஏற்றுக்கொண்டதனால் வல்வெட்டித்துறை மக்களின் வாழ்வியலில் உணர்வுகள், புரிதல்களை என்னால் உன்னிப்பாக பார்க்க முடிந்தது. அப்படி ஒரு நாள் ஒரு திருமணவிழாவில் இருந்த பொழுதில் ஏற்கனவே காண்டியண்ணா அங்கு இருக்கின்றார். பந்தலில் நிறையப்பேர் இருக்கின்றார்கள். அந்த சபைக்கு அருச்சுனன் அண்ணா அவர்கள் வருகின்றார்கள். உடனே காண்டீபன் அண்ணா எழுந்து நிற்கின்றார். தமையனார் அவரை அமரும்படி சிறிய அசைவில் சைகை செய்து விட்டு செல்கின்றார். ஆனாலும் தம்பி அவர்கள் தமையனார் இருக்கையில் அமர்ந்த பின்னர்தான் தான் அமர்ந்து கொள்கின்றார். இவ்வாறான உயர்ந்த பண்பாடுகளுடன் ஒற்றுமையாக வல்வெட்டித்துறை சமுதாயம் வாழ்ந்திருக்கின்றது.

வல்வெட்டித்துறை மக்களின் வீர விளையாட்டுக் கலாசாரத்தை பேணிக்காத்ததில் சிதம்பரக்கல்லூரியின் பங்குதான் முதன்மையானது. இதனால்தான் வல்வெட்டித்துறை சமுதாயம் தான் வாழும் ஒழுங்கை பகுதிகளை கழகங்களாக பிரித்து தம்வாழ்வின் வெற்றி தோல்விகளை பங்கிட்டு பண்பான சமுதாயமாக மிளிர முடிந்தது. சிதம்பரக்கல்லூரியின் விளையாட்டு விழா என்றால் அன்று ஊர்மக்களுக்கு ஒரே கொண்டாட்டமாக இருக்கும். எங்கள் காலத்தில் சுமார் 1500 மாணவ, மாணவிகள் கல்வி கற்று வல்வெட்டித்துறையின் உயர்கல்விச் சமுதாயத்தை பண்படுத்தி இருந்தோம். அதற்காக காண்டீபன் அண்ணா தனது பெரும் பங்காக விளையாட்டுத்துறையிலும் சாரணியத்திலும் ஆற்றி மாணவர் தலைவராக

இருந்து ஒழுக்கம் நேர்மையாக தனது கடமைகளையும் செய்து முடித்தார்.

சிதம்பரக்கல்லூரியின் விளையாட்டு விழாவானது கல்லூரி மைதானத்தில் நடந்தாலும் தீவிரமான பயிற்சிகளை நெற்கொழு மைதானத்தில்தான் பெறுவோம். குறுந்தூர ஓட்டங்களுக்காக காண்டீபன் அண்ணாவுடன் நாகேஸ்வரன் விசியராஜா போன்றோரும் வருவார்கள். வழமையான தேக அப்பியாசங்களை செய்துவிட்டு பத்து பதினைந்து தடவைகள் நேரம் கணித்து பயிற்சி எடுப்பார்கள். ஒரு மைல் மரதன் ஓட்டப்போட்டிக்காக நெற்கொழு மைதானத்தில் இருபத்தி நான்கு தடவைகள் சுற்றித்தான் பயிற்சிகளை முடிப்பார்கள். காண்டீபன் அண்ணாவை விட நாங்கள் நான்கு வயது சிறியவர்களாக இருந்தாலும் எங்களிடம் மிகவும் அன்பாகவும் பண்பாகவும் பழகிக்கொள்வார். அந்த இளமைக்காலம் எங்கள் பலருக்கு வசந்தகாலமாகத்தான் இருந்தது.

எங்கள் கல்லூரி வாழ்க்கையில் பாடசாலைக்கு நடந்து போவது, மத்தியானம் இடைவேளைக்கு சாப்பாட்டுக்கு வந்து போவது, பிறகு பாடசாலை முடிய வீட்டுக்கு வந்து பின்பு மைதானங்களுக்கு போவது, அதன் பிறகு வீடு வந்து இரவு பாடசாலைக்கு போவது, உண்மையாக நடந்த சம்பவங்கள். இத்தகைய வீறு கொண்ட இளம் சமுதாயத்தால்தான் சிதம்பரக்கல்லூரி விளையாட்டு வீரர்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் தெரிவாகி, கொழும்பு வரை சென்று ஊருக்கு புகழ்சேர்க்க முடிந்தது. சாரணர் இயக்கம் கொழும்பில் நடைபெற்ற போட்டிகளில் மூன்று முறையும் முதலிடம் வந்து “பெற்றிக்” என்ற கேடயத்தை சொந்தமாக்கிக் கொண்டது.

எமது வல்வெட்டித்துறை சிதம்பரக்கல்லூரியில் கல்வி கற்று அகில இலங்கைக்கு கைப்பந்தாட்டத் தலைவனாக 1960ம் ஆண்டு விளையாடிய சோமசுந்தரம் கதிர்காமலிங்கம் முதல் அகில இலங்கை ஆட்டங்கள் வரை சிறப்பாக விளையாடிய காண்டீபன் அண்ணாவரை தொடர்ச்சியாக வல்வெட்டித்துறை வாசம் நிரம்பி வழிந்து கொண்டிருக்கின்றது.

உலகில் கொரோணா தொற்று நோய் முன்னும் பின்னும் எம்மை துரத்திக்கொண்டிருக்கின்றது. நாளை ஒரு நாள் விடிந்து நாமிருந்தால்...

வல்வெட்டித்துறை வாசமுடன்

**குச்சம் குட்டித்துரை (ஞானா போட்டோ)**

**ஐக்கியராச்சியம்.**

# ஊருக்கும் கல்லூரிக்கும் பெருமை தேடித்தந்த காண்டீபன் என்னும் காண்டீபம்

"மலர் மிசை ஏகினார் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ்வார்" - வள்ளுவம்

எனது வாழ்நாளில் மறக்கமுடியாத நண்பர் காண்டீபன். கல்லூரி வாழ்க்கையில் இருவரும் சந்தித்தோம், நண்பர்களாக இணைந்தோம். எமது நட்பு வாழ்நாள் முழுவதும் நிறைந்த, செறிந்த நட்பாகும்.

வல்வை சிதம்பரக்கல்லூரியில் கல்விப்பொது உயர் தர கலை வகுப்பில் இணைந்தோம். இருவரும் தமிழ், அரசியல், வரலாறு, புவியியல் ஆகிய பாடங்களை கற்றதினால் ஒரே வகுப்பில் தொடர்ந்து இருந்தோம். இருவரும் அரசியல், வரலாறு பாடங்களில் அதிகமான நாட்டம் உடையவர்களாக இருந்தோம். அரசியல், வரலாற்று கருத்தாடல்கள் எமக்குள் எப்பொழுதும் இருக்கும்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற கனிகன் பூங்குன்றனார் கருத்துக்கமைவாகும் படி எமது கலந்துரையாடல்கள் சர்வாதிகாரம், நாசிசம், பாசிசம், சோஷலிசம், ஜனநாயகம் போன்ற அரசியல் தலைப்புகளிலும் வரலாற்றில் கைத்தொழில்புரட்சி, பிரான்சியப் புரட்சி, ஆங்கிலப்புரட்சி, போல் சேவிக் புரட்சி, ரஷ்யப் புரட்சி போன்ற விடயங்களிலும் இருக்கும். ஓய்வுப் பாடவேளையில் இவற்றை அலசி ஆராய்வதே எமக்கு பொழுது போக்காக அமையும்.

அந்தக் காண்டீபனின் கையில் இருப்பது காண்டீபம் என்னும் வில், எமது காண்டீபனின் கையில் எப்பொழுதும் இருப்பது ஆங்கில மொழிகாட்டும் அகராதி (dictionary). இதுவே எனக்கு பல தடவைகளில் பேருதவியாக அமைந்துள்ளது. தன் ஆங்கில மொழிவளத்தை வளர்த்துக்கொள்ள பெரிதும் காண்டீபன் அக்கறை காட்டினார்.

“மனிதரெலாம் அன்பு நெறி காண்பதற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவடைந்து
தனிமனித தத்துவமாய் இருளைப் போக்கிச்
சகமக்கள் ஒன்றென்ப துணர்வதற்கும்”

-பாரதிதாசன் கூறுவது இதுதான்

நூல்கள் வாசித்தல் அவசியம் என்பதாகும். காண்டீபனும் நிறைய நிறைந்த புத்தகங்களை வாசிப்பவர் ஆவார். எப்பொழுதும் “வாசிப்பு ஒரு மனிதனை முழுமனிதனாக்கும்” “Readings makes a fullman” என்றது ஆழமான வாசிப்பு தொடர்பான கருத்தாகும்.

காண்டீபனின் வாசித்தல் திறன் அவரை இந்தியத் தலைவர்களான காந்தி, சுபாஸ்சந்திரபோஸ், நேரு, அம்பேத்கர் போன்ற தலைவர்களின் வாழ்க்கைப் பாதைகளைப் பெரிதும் கடைப்பிடிக்கத் தூண்டியது சிறப்புடையதாகும்.

சிதம்பரக்கல்லூரியில் சிறந்த விளையாட்டு வீரனாக விளங்கி, அகில இலங்கைப் போட்டிகளிலும் முதன்மை வீரனாகத் தெரிவாகி, எமது கல்லூரிக்கும் ஊருக்கும் பெரும் புகழைச் சேர்த்தார். அவ்வாறு புகழ் பெற்றாலும் தனது இயல்புகளை மாற்றாத சாதாரண மனிதனாகவே (Simple and modesty man) விளங்கினார். அவருடன் ஒரே வகுப்பில் கல்வி கற்றதனால் நானும் பெருமை அடைந்தேன்.

வல்வை சிதம்பரக்கல்லூரி உயர்தரமாணவர் மன்றம் 1969ல் கூடிய பொழுது அதன் தலைவராக க.சோ.சிவனருள்சுந்தரமும் (காண்டீபன்) செயலாளராக சி.கிருஷ்ணமூர்த்தி ஆகிய நானும் தெரிவு செய்யப்பட்டோம். இதில் சிறப்பு யாதெனில் நாம் இருவரும் ஒரே வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடக்கூடியது. இத்தெரிவில் சக உயர்தர வகுப்பு மாணவர்கள் அனைவரும் (12ம், 13ம் தரம்) விஞ்ஞானம், கலை என பிரிவு வேறுபாடு இன்றி எம்மைத் தெரிவு செய்தனர். இங்கு எமது ஒற்றுமை சிறப்பாக வெளிக்காட்டப்பட்டது.

மாணவனாக இருந்தகாலத்தில் எம் மத்தியில் ஏற்பட்ட நட்பு காண்டீபன் வீட்டிலும் செல்வாக்கு பெற்றது. காண்டீபனின் அப்பா சோமசுந்தரம் ஐயா அவர்கள், ‘பயில்வான் சோமு’ என அழைப்பார்கள். அவர்களும் அவரது மனைவி திருமதி பரமநாயகி அவர்களும் மிகுந்த சிறப்புடைய தம்பதிகள். அவர்களின் சந்தி

ஒழுங்கையில் அமைந்துள்ள வீட்டுக்குப் பல தடவைகள் சென்று இருக்கின்றேன். காண்டீபனின் பெற்றோரின் அன்பும் ஆதரவும் எப்பொழுதும் எனக்கும் கிடைத்தது. அந்த அம்மா எத்தனையோ நாள் உணவு தந்து அனுசரித்துள்ளார். அந்த வாழ்க்கை என்னால் மறக்கமுடியாது. தனது ஆறு புதல்வர்களுடன் என்னையும் ஒருவராக சேர்த்து அன்புகாட்டியவர்.

காண்டீபன் மிகுந்த சிவபக்தி உடையவர். அவருடைய பக்தி அவருக்கு எப்பொழுதும் துணையாக இருந்தது.

"பக்தி யுடையவர் காரியத்திற்
பதறார்! மிகுந்த பொறுமையுடன்
வித்து முளைக்குந் தன்மை போல்
மெல்லச் செய்து பயனடைவார்"

என்று கூறியுள்ளார் மகாகவி பாரதியார்.

காண்டீபன் வாழ்க்கையில் பெரியோர்களைத் துணை இருத்தி வாழ்ந்துள்ளார்.

"தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுளெல்லாந்தலை"

எனும் வள்ளுவரின் வாக்கு 'தம்மைக் காட்டிலும் அறிவு, அனுபவம், திறமை முதலியவற்றில் பெரியவர்கள் தமக்கு எப்பொழுதும் துணை இருக்கப் பெறுவது, தமக்குள்ள எல்லா வல்லமையிலும் சிறந்த வல்லமையாகும்' எனக் கூறுகின்றது.

எமது இறப்பைப் பற்றி கவலை கொள்ளாது வாழ்தல் சிறப்பு. எமது பிறப்பின், இறப்பின் இரகசியம் இதுவே.


"உறங்குவது போலுஞ் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"

திருக்குறள்-

ஓம் சாந்தி.... ஓம் சாந்தி... ஓம் சாந்தி...
சிவாய நம ஓம்

**சிவா.கிருஷ்ணமூர்த்தி**

வதனமதில் நித்தமும் தவழும் புன்னகையுடன்



## நலம் தரும் நட்பு

நல்ல நட்பு அடிமரம் விழாமல்
நம்மைத் தடுத்துக் காப்பாற்றிக் கொண்டிருக்கும்
விழுதுகள் போன்றது.
நட்பு ...
நம்மை ... நம் செயலை ஏன் நம்முள் கலந்து
நம்மையே மாற்றக் கூடியது.

அமரர் காண்டீபனின் நட்பும் அத்தகையதே !
அழகுற வாழ்ந்து பிறரையும் மகிழ்விக்கும்
அவரது இனிய சுபாவம்
அவருக்கு இறைவன் அளித்த வெகுமதியே!

பதினாறில் அழகாயிருப்பது இறைவனின் பரிசு!
எழுபதுகளிலும் அழகாயிருப்பது ஆன்மீக சாதனையின் விளைவு
இருபதுகளில் அழகின் சிகரமாகி
எழுபதுகளில் அன்பின் அடையாளமாய் நின்றாய் ....

முகமே புன்முறுவலா! புன்முறுவலே முகமா! - எனத்
தடுமாற வைக்கும் நண்பனே!
முத்தான உம் வாரத்தைகள் எம்
செவிகளில் என்றென்றும் நிலைத்திடும்
பிறர் மனம் நோகாது நீர் நடந்திடும் பாங்கு
பிறவியிலேயே இறைவன் உமக்கு அளித்த வெகுமதியே!

குறை கூறி நிறைவு காணாத உம் மனப்பாங்கு
குலமகனான உமக்கு கிடைத்த - ஒரு தங்கப் பதக்கமே!

கள்ளம் கபடமற்ற உன் பேச்சு
கட்டி வைத்த என் மனதை நெகிழ வைத்ததும் நிஜமே!
புண்பட்ட எம் மனங்களின் வேதனைகளை
புன்னகையுடன் நீர் கூறும் கதைகள்
தென்றலென வருடியதும் நிஜம் தான்...
குறைகளைக் களைந்து .........
நிறைகளைப் பாராட்டும் உமது குணம்
எம்மைப் பல தடவைகளில் வியக்க வைத்துள்ளது.

“பதவி உயரும் போது பண்பும் உயர வேண்டும்
பழைய நட்புகளை மறக்கக் கூடாது”
என்பதை வாழ்ந்து காட்டிய நண்பனே!
வாழ்த்துகின்றேன் - வாழ்த்திக் கொண்டேயிருப்பேன்.

“எல்லா வாசகர்களும் தலைவர்களல்ல ஆனால்
எல்லாத் தலைவர்களும் வாசகர்களே!”
என்று கூறுவார்கள்

(All readers are not leaders , but all
Leaders are readers)

நண்பா! உமது தொடர் வாசிப்பு
நல்லதொரு தலைவனாக உம்மை
மாற்றியதும் உண்மைதான்.
கடவுள் வசிக்கின்ற உள்ளத்தையே
வாசகம் என்கிறோம்.
லட்சத்தில் ஒருவன் தான் தன் உள்ளத்தில்
இறைவனை வாசம் செய்ய விடுகிறான்
அவனையே வாசகன் - மாணிக்கவாசகன்
என்று போற்றுகிறோம்.

கடவுள் மீது கொண்ட தீராதபக்தி
ஓயாத வாசிப்பு ... இவை தான்
காண்டீபனின் சிறப்பம்சங்கள் ...

வல்லிபுர ஆழ்வாரின் புகழ் பாடும் என் நண்பன்
வல்லிபுர ஆழ்வார் சமுத்திர திருமஞ்சனமாடும் நன்னாளில்...
உலகில் மழலை காண்டீபன் அவதரித்தமையை
உவகையுடன் சொல்லி மகிழ்ந்திடுவார்.

"எரியும் நெருப்பின் அழகை இருள் காட்டுகின்றது
சாவின் நினைவு வாழ்க்கையின் மென்மையான
அழகை வெளிக் கொணர்கிறது"
இது எவ்வளவு உண்மை!
இனிய நண்பன் காண்டீபனின் கள்ளமற்ற புன்னகை ...
கட்சிக்காரர்களுக்கு உதவ வேண்டும் என்ற பேரவா
நீதிமன்றங்கள் ஒவ்வொன்றிலும் செய்த பிரதிபலனற்ற சேவைகள்
நண்பர்களின் வீட்டு விசேட நிகழ்வுகளில்
அவர் செய்த உதவிகள் என்று ...
அவரின் மென்மையான அழகை
அழகுறப் பட்டியல் போட்டுக் கொண்டே போகலாம் ...

"இனிமையான வார்த்தைகளைப் பேசுபவனும்
அதன்படியே நடப்பவனும் அழகான மலரைப்
போல அனைவராலும் விரும்பப்படுகிறான்"
என்றார் புத்தர் பெருமான்.

அவ்வாறே வாழ்ந்து காட்டி அமரத்துவம்
அடைந்த நண்பனே!

"முடியும்"
என்பது நம்பிக்கையின் ஆரம்பம்
முயற்சிக்கு முன்னுரை
எழுச்சிக்கு வித்து
செயலுக்கு ஆதாரம்
வெற்றிக்கு ஊன்றுகோல்
என்று .........
அழகுற வாழ்ந்து காட்டிச் சென்றுள்ளீர்

நல்லதொரு நண்பனாய் ..........
அன்பான கணவனாய் ..........
ஆதரவான அப்பாவாய் ..........
அருமையான சகோதரனாய் ..........
மரியாதைக்குரிய மாமனாய் ..........
வாழ்ந்து
வாழ்வை நிறைவு செய்துள்ளீர்.

மனிதன் பிறப்பதும் இறப்பதும் இயற்கை
மண்ணில் வாழ்கின்ற காலத்தில் அவன்
செய்கின்ற நற்காரியங்கள்
அவனை வாழ்வில் உயர்த்தி வைக்கும்
அந்த வரிசையில் என்னருமை நண்பன்
அழகுறச் செய்த பங்களிப்புகள் யாவும்
எம்மை வியக்க வைத்ததும் நிஜமே!

அவரது இழப்பின் துயரில் ஆழ்ந்துள்ள
அன்னாரது குடும்பத்தினருக்கும்,
உற்றார், உறவினருக்கும் ஆறுதல் கூறி
அன்னாரின் ஆத்மா சாந்தமடைய
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**பாலசிங்கம் சுப்பிரமணியம்**
ஓய்வு நிலை மாவட்ட நீதிபதி

## வல்வைக்கான ஒரு குறியீடு காண்டீபன் அவர்கள்

மனிதர்களாகப் பிறந்தால் மட்டும் போதாது. மனித விழுமியங்கள், ஒழுக்க நெறிகள் ஆகியவற்றை வாழ்வில் கடைப்பிடித்து ஒழுகி வரவும் வேண்டும். வையத்துள் வாழ்வாங்கு வாழ்தல், மண்ணில் நல்லவண்ணம் வாழ்தல் என்றெல்லாம் விதந்து சொல்லப்படுவதற்கு உதாரண புருஷர்களாக வாழ்ந்தாலே அவர்கள் மனிதர்கள் என்று கணிக்கப்படுவதற்குத் தகுதியானவர்கள்.

இந்த அடிப்படையில் காண்டீபன் என அன்பாகச் சுட்டப்படும் சோமசுந்தரம் சிவனருள்சுந்தரம் அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை இப்படித்தான் வாழவேண்டும் என்ற நியதியைப் புகட்டுவதாக இருந்துள்ளமை கண்கூடு.

அமரர் காண்டீபன் அவர்களது வாழ்வியலானது அன்பு, கருணை, மனிதநேயம், ஆன்மீகம், நல்லொழுக்கம், நடுவுநிலைமை, சத்தியம், தர்மம், பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் முதலான நெறிகளைப் பேணி அமைந்திருந்தமை எல்லோரும் கவனித்துணர்ந்த உண்மை.

வைத்திலிங்கப் புலவர், அமெரிக்காவுக்குக் கப்பலோட்டிய தமிழர்கள், ஆழிக்குமரன் ஆனந்தன், தமிழர்களின் இரண்டாயிரம் வருட வரலாற்றில் முன்னெப்போதுமே கண்டிராத வீர மறவர்கள். திரைகடலோடித் திரவியம் தேடிய வர்த்தகர்கள் முதலானோர் தோன்றிய வல்வை மண்ணில்தான் மேலுமொரு ஆளுமையாகக் காண்டீபன் பிறந்தார். வல்வெட்டித்துறைக்கான ஒரு குறியீடு அவர்.

"ஒரு குழந்தை பிறக்கும் போது ஒரு வெற்றுத் தாளாகவே இப்பூமிக்கு வருகின்றது. பின்புதான் தன்னை வடிவமைத்துக் கொள்கின்றது" என ஜோன் லொக் கூறுகிறார். இதற்கு மறுதலையாக "ஒரு குழந்தை தனது பரம்பரை இயல்புகளையும் கருவில் இருக்கும் போது நடைபெறும் சம்பவங்களின் எச்சங்களையும்

உணர்வுகளையும் உள்வாங்கியபடி பிறக்கின்றது'' என்பது பிறிதொரு சாரார் கருத்து.

திருவாளர் சிவனருள்சுந்தரம் அல்லது காண்டீபன் அவர்கள் எந்த வகையில் இவ்வாறு உன்னதமாக வடிவமைக்கப்பட்டாரோ அறியேன். அவர்பற்றி எம்முள் கட்டமைக்கப்பட்டிருக்கும் பிம்பம் மிக உயர்வானது. அற்புதமானது.

செல்வச் சீமானாக வாழ்ந்த பயில்வான் சோமசுந்தரம் அவர்களின் மகனாகப் பிறந்த காரணத்தினாலோ என்னவோ சகல விளையாட்டுக்களிலும் சாதனை வீரனாகத் திகழ்ந்தார். அவரது ஆங்கில அறிவு, ஆன்மீக அறிவு, உலக விசாரங்களிலான அறிவு நமக்கெல்லாம் பிரமிப்பூட்டுவன. எந்தத் துறையிலும் நமக்கெழும் சந்தேகங்களை அவரிடம் கேட்டுத் தெளிந்து கொள்ளக் கூடியதாக இருந்தமை மறந்து விட முடியாத பெருமைக்குரிய அனுபவங்கள்.

நான் அவருடன் நெருங்கிப் பழகிய பின்னர் அறிந்துணர்ந்து கொண்டவையாவன.

- ♦ காந்தீயத்தின் மீது நம்பிக்கையுள்ளவர்.
- ♦ பகவான் இராமகிருஷ்ண பரமஹம்சர், அரவிந்தர், சுவாமி விவேகானந்தர், ரமணரிஷி, காஞ்சிப் பெரியவர் முதலான மகான்களிடம் அளவுகடந்த பயபக்தியுள்ளவர்.
- ♦ வல்வை வாலாம்பிகை சமேத வைத்தீஸ்வரப் பெருமான், முத்துமாரி அம்மன், நெடியகாட்டுப் பிள்ளையார் ஆகிய ஆலய மூர்த்திகளில் தீவிர பக்தியுள்ளவர்.
- ♦ எவ்வளவு கூடுதலாகப் பணம் தர யார் முயற்சித்தாலும் தனது சட்டத்தொழிலில் மனச்சாட்சிக்கு விரோதமான செயற்பாட்டிற்கு ஒத்துப் போகாதவர்.
- ♦ பிறந்த மண்ணான வல்வெட்டித்துறையின் மீது அதீத விசுவாசமுள்ளவர்.
- ♦ காலத்திற்கேற்ற வகையில் பழமையும் புதுமையும் கொண்ட அற்புத சிந்தனையாளர்.
- ♦ தர்மத்தையும் நேர்மையையும் கடைப்பிடித்து ஒழுகியவர்.

திருவாளர் காண்டீபன் அவர்கள் தனது வாதிடும் திறமையைப் பலநூறு தடவை பலநீதி மன்றங்களில் நிரூபித்தவர். அதேசமயம்

பல்வேறு விடயங்கள் தொடர்பாக சமூகப் பெரு வெளியில் பல பட்டிமன்றங்களில் தனது அறிவுக் கூர்மையை, வாக்கு வன்மையை, பட்டறிவை, நூலறிவை வெளிப்படுத்தியவர். அவை அவருக்கு மேலும் புகழையும் பெருமையையும் ஈட்டிக் கொடுத்திருந்தன.

எண்பதுகளின் முன்னரையில் எமது ஊராம் கொற்றா வத்தையில் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் ‘‘குற்றவாளிக் கூண்டில் இராமன்’’ என்ற பொருளிலான வழக்காடு மன்றத்தில் இரு பக்கங்களிலும் மூன்று வழக்கறிஞர்களாக ஆறுபேரும் நீதிபதியாக ஒருவருமாக ஏழு சட்டத்தரணிகள் பங்குபற்றிய நிகழ்வில் ‘‘இராமன் குற்றவாளியல்ல’’ என்று வாதாடிய திரு.காண்டீபன் அவர்கள் தனது வாதத்திறமையால் தனது பக்கத்திற்கு வெற்றியீட்டிக் கொடுத்து எல்லோராலும் பாராட்டப்பட்டமை இன்றும் பசுமையான நினைவு களாக உள்ளன.

ஆம். நீதிமன்றங்களிலும் சரி, பட்டிமன்றங்களிலும் சரி, தேர்ந்தெடுக்கப்பட்ட கூர்மையான அவரது வார்த்தைகள் ஒவ்வொன்றும் அருச்சுனனின் காண்டீபத்திலிருந்து புறப்படும் கூரிய கணைகளாகவே புறப்படுவன. ஆனால் யதார்த்தத்தில் மிக மென்மையான ஒரு மனிதர்.

‘‘நற்றாமரைக் கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்’’

என்ற ஔவையாரின் கூற்றுக்கேற்ப அவருக்கு நல்ல நண்பர்களும் உறவினர்களும் வாய்த்திருந்தனர். அதுவும் அவருக்கு ஒரு பலமாகும்.

சம்பந்தப் பெருமான் பாடிய மூன்றாம் திருமுறையில் அமைந்த தேவாரம் ஒன்றிற்கேற்ப திருவாளர் காண்டீபன் அவர்களின் பிற்கால வாழ்வு அமைந்ததையும் நாம் கண்டுணர முடியும்.

‘‘இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உன்கழல் தொழுதெழுவேன்’’

முற்பிறவிக் கர்மாவின்படி இடரும் நோயும் தொடர்ந்தால் இறைவனை வெறுப்பவர்கள்தான் உலகில் அதிகம். ஆனால் திருவாளர் காண்டீபன் அவர்கள் நோயுற்ற காலத்திலும் இறைவன் மேல் வைத்த பக்தியில் குறை வைக்கவில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக அவரிடமிருந்த தன்னம்பிக்கையும்

தைரியமும் எமக்கு வியப்பூட்டுவன. எச்சந்தர்ப்பத்திலும் மனஞ்சோர்ந்து போகாது உடற்பயிற்சிகளைத் தொடர்ந்து செய்தார். அதே கம்பீரத்துடன் தொழில் ரீதியாக நீதிமன்றத்திற்கும் சென்றார். இவை நாம் அவரிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் எனலாம்.

"பயில்தொறும் பண்புடையாளர் நட்பு" என்பது இதுதானோ? உயர்பதவி வகித்து ஓய்வு பெற்றிருக்கும் நல்ல மனைவி, கல்வியில் உச்சத்தைத் தொட்டதுடன் கலாசார பண்பாடுகளைப் பேணி வாழும் மூன்று பிள்ளைகள், இச்சிறப்புக்களுடன் நெறி தவறாது வாழ்ந்த இல்வாழ்க்கை. இவ்வாறாகத் திருவாளர் காண்டீபன் போல் வாழமுடியுமாயின் "மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" எனும் அப்பரடிகளின் தேவாரமே நம்முன்னே நிதர்சனமாகத் தெரியும் எனக் கூறி நிறைவு செய்கிறேன்.

**கொற்றை பி.கிருஷ்ணானந்தன்**


வியத்தகு பேச்சாளனாக..


Workshop on Public Interest Litigation
for
Jaffna Bar Association
March 4 - 5, 2006
Renuka Hotel, Colombo
The Asia Foundation
British High Commission

## மனிதருள் ஒரு மாணிக்கம்...

அமரர் காண்டீபன் அவர்களை சந்திக்கக்கூடிய வாய்ப்பு 1998 ஆம் ஆண்டு வாக்கில் எனக்கு கிட்டியது. ஒரு நாள் மாலை நேரம், முல்லைத்தீவு Dr.பொன்னம்பலம் ஞாபகார்த்த வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் நான் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொழுது எனது அறை வாசலில் ஒரு கம்பீரக்குரல் "உள்ளே வரலாமா" என அனுமதி கேட்டது. நிமிர்ந்து பார்த்த போது, சட்டத்தரணி காண்டீபன் என் முன்னே நின்றார். சம்பிரதாயபூர்வமான அறிமுகத்திற்கு பின் அவர் என்னை சந்தித்ததன் நோக்கத்தைத் தெரிந்து கொண்டேன். அவருக்கு உள்ளங்காலில் நீண்ட நாட்களாக ஒரு புண் இருந்தது. அதற்காக சிகிச்சை பெற என்னிடம் வந்திருந்தார். நான் அவரைப் பரிசோதித்துவிட்டு சலரோகம் உள்ளதா என வினவினேன். அதற்கு அவர் இல்லை என பதிலளித்தார். அவருக்கான சிகிச்சை வழங்குவதற்கு முன் அவரை ஒரு குருதிப்பரிசோதனை செய்ய வேண்டுமெனக் கூறினேன். அவரோ தனக்கு சலரோகம் இல்லையெனவும் எதற்காக இந்தப் பரிசோதனை எனவும் குழம்பினார். சிறிய விவாதத்தின் பின் எனது வற்புறுத்தலின் பேரில் பரிசோதனை செய்ய ஒப்புக்கொண்டார். குருதியில் குளுக்கோஸ் அளவு பரிசோதிக்கப்பட்டது. நான் சந்தேகித்தது போலவே குருதி குளுக்கோசின் அளவு 350ஐ தொட்டிருந்தது. இது சராசரி அளவைவிட இரண்டரை மடங்கு அதிகமானது. நோயின் தீவிரத்தன்மை பற்றி விரிவாக எடுத்துரைத்ததன் பின்னரே அதற்கான மருந்துகளை எடுக்க ஒப்புக் கொண்டார். கிரமமாக எடுத்த மருந்தினால் குருதி குளுக்கோஸ் அளவு கொஞ்சம் கொஞ்சமாக கட்டுப்பாட்டுக்கு வந்ததுடன் உள்ளங்கால் புண்ணும் பூரணமாக குணமடைந்தது. இவ்வாறு விவாதத்தில் ஆரம்பித்ததுதான் எமது நட்பு.

நான் பணியாற்றிய மருத்துவமனையிலிருந்து கிட்டத்தட்ட 300மீற்றர் தொலைவில் சட்டத்தரணி அவர்களின் இல்லம் அமைந்திருந்தது. இதன் காரணமாகவே எனது ஓய்வு நேரங்களில் துறை சார்ந்த விடயங்கள் தாண்டி ஆங்கிலத்தில் கலந்துரையாடவும் அறிவைப் பகிர்ந்து கொள்ளவும் இவரைத் தவிர எனக்கு வேறு தெரிவுகள் இருக்கவில்லை. இவ்வாறாகத் தொடர்ந்த நட்பு நாளடைவில் நெருக்கமானது.

மாலை வேளைகளில் அவருடைய வீட்டுக்கு செல்லும் போதெல்லாம் அவரின் உபசரிப்பு என்றும் மாறியதில்லை. அவருடைய நட்பு போலவே எள்ளுருண்டையும், பால்தேனீரும் என்றும் தித்திக்கும் நினைவுகள். சிறந்த காருண்யவானாகிய சட்டத்தரணி நான் பரிந்துரைக்கும் நண்பர்களுக்கு சட்ட சிக்கல் ஏற்படும் போதெல்லாம் இலவசமாகவே ஆலோசனைகளை வழங்கியவர். தேசத்தின் விடுதலையில் தீராத பேரார்வம் கொண்டவர். இவ்வாறு அவரின் நற்பண்புகளை கூறிக் கொண்டே போகலாம்.

காலத்தின் கோலத்தில் திசைக்கு ஒருவராக தூக்கி எறியப்பட்டாலும் அவரைப் பற்றி நானும் என்னைப்பற்றி அவரும் ஏதாவது ஒரு வகையில் அறிந்து கொள்வோம். பின்னொரு நாளில் சட்டத்தரணி பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டு இருந்ததை கேள்வியுற்று அவரை சென்று சந்தித்தேன். நோயின் தீவிரத்திலும் அவரது பேச்சில் துணிவும் தன்னம்பிக்கையும் நிதானமும் வெளிப்படுவதைக் கண்டு ஆச்சரியமுற்றேன். இந்தப் போராடும் குணம் தான் அவரை மேலும் பல ஆண்டுகள் உயிர்ப்புடன் வைத்திருந்தது என நம்புகிறேன்.

மிகச் சிறந்த பண்பாளனும் சட்டவாளனுமாகிய நண்பன் காண்டீபனை இயற்கை தன்னோடு அணைத்துக் கொண்டதையிட்டு மிகவும் மனம் வருந்துகிறேன். சட்டத்தரணியின் பிரிவால் துன்புற்றிருக்கும் அவரின் குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறுவதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடைய பகவான் ஸ்ரீ கிருஷ்ணனை வேண்டி நிற்கின்றேன்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**Dr.K.Bavananthi**

# வைத்தீஸ்வரன் நிழலில் வாழ்ந்த செம்மல்

சட்டத்தரணி மதிப்புக்குரிய காண்டீபன் என்று அழைக்கப்படும் திரு.க.சோமசுந்தரம் சிவனருள்சுந்தரம் அவர்களை 2017ம் ஆண்டு வல்வெட்டித்துறையில் அவர்கள் இல்லத்தில் முதன்முறை சந்தித்தேன். அருள்மிகு செல்வச்சந்நிதி ஆலய வளாகத்தில் அங்கு வரும் பக்தர்களின் வசதிகளுக்காக ஓர் அறக்கட்டளையை நிறுவும் நோக்கத்தில் வாங்கிய காணி பற்றி பேசுவதற்காக எனது சகோதரர் என்னை அழைத்துச் சென்றிருந்தார். நாங்கள் சென்ற சமயம் அவர் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தார். சுகந்தமான ஊதுபத்தி சுவாமி படங்களுக்கு காட்டி வழிபாடு ஆற்றிக் கொண்டிருந்தார். வழிபாடு நிறைவேற்றியதும் என்னை அன்புடன் வரவேற்று சுவிஸ்தலாந்து பற்றி பல விடயங்களை அறிந்து கொண்டார். நான் வசித்து வரும் ஒலிம்பிக் தலைநகரான லொசான் நகரம், இங்கு இருக்கும் தமிழர்கள் வாழ்வு பற்றி ஆவலுடன் கேட்டு அறிந்து கொண்டார். அவர்கள் துணைவி எங்களுக்கு தேநீர் பரிமாறினார்.

மாலை நேரம் ஆனபடியால் பலர் ஐயாவிடம் சட்டரீதியான அலுவல்களுக்கு தொடர்ந்து வந்து கொண்டிருந்தார்கள். அவதியானவர்கள், ஆறுதலாக செய்யலாம் என்பவர்கள் என பல தரப்பட்டவர்கள் வந்தார்கள், போனார்கள். மற்ற வக்கீல்களின் அலுவலகங்களில் பார்க்காத விடயம் ஒன்று அவதானித்தேன். எங்கும் எந்த வகையிலும் இறுக்கிப் பேசியதை பார்க்கமுடியவில்லை. அமைதியுடன், அன்பாக, சிரித்த முகத்துடன்தான் எல்லாரிடமும் பதில் சொன்னார். இலங்கையில் டாக்டர்கள், வக்கீல்கள் இன்னும் வேறு பல இலாகாக்களில் கடமையாற்றுபவர்களில், பணத்தையும் வாங்கிக் கொண்டு கடுமையாக நடப்பவர்கள்தான் 50%துக்கு மேல் உள்ளவர்கள். ஏதோ தாங்கள் வானத்தில் இருந்து இறங்கினவர்கள் என்ற நினைவில் கடமையில் இருப்பார்கள். ஆனால் காண்டீபன் அவர்கள் இவ்வளவு சாந்தமாக தனது வாடிக்கைதாரர்களிடம் நடப்பதையிட்டு உண்மையில் மனம் மகிழ்ச்சி கொண்டேன். ஒவ்வொரு தடவையும் இலங்கை வரும் பொழுது தவறாது சந்தித்தேன்.

வல்வெட்டித்துறை சிவன் அம்பாள் ஆலயத்துக்கும் அம்மன் கோவிலுக்கும், சிறு வயதிலிருந்தே நான் என் பெற்றோருடன் செல்வது வழக்கம். இப்பிராந்தியத்தில் உள்ள பல கோவில்களின் பழமை பற்றிய செய்திகளை என்னுடன் நிறைய பலமுறை பேசினார். வல்வெட்டித் துறை மண்ணின் பெருமை பற்றி உணர்வு பூர்வமாக கண்ணில் நீர் மல்க பல தடவை சொன்னார். தமிழ் உணர்வாளரும் சைவ சமய பக்தனும் கூட.

அவரது மறைவு எனக்கு பெரிய அதிர்ச்சியை தந்தது. அவர் மூலமாக எங்கள் அறக்கட்டளைக்கு பல யோசனைகள், அறிவுறுத்தல்கள் பெறக் காத்திருந்தேன். எனினும் சென்ற ஆவணியில் ஆங்கிலத்திகதி 18ம் நாள் செல்வச்சந்நிதி வளாகத்தில் எமது அறக்கட்டளையின் முதலாவது கட்டடத் திறப்புவிழா செய்த பொழுது அமரர் காண்டீபன் அவர்களும், அவர்கள் மனைவி திருமதி சரஸ்வதி சிவனருள்சுந்தரம் அவர்களும் தம்பதிகள் சகிதமாக சரியான நேரத்தில் குடிபுகுந்து அன்னதானம் கொடுத்துக் கொண்டிருந்த நேரம் வந்து இருந்தார்கள். எங்கள் முயற்சியைப் பாராட்டி வாழ்த்தினார்கள். அவர்களிடம் ஆசி பெற்று பரிசும் பெற்று அவர்களுக்கு அன்னம் பரிமாறினோம். மிக்க மகிழ்வுற்றோம். அந்த நினைவு இன்றும் பசுமையாய் உள்ளது. அவர்கள் செய்த பணியை அவர் தனயன் மக்களுக்கு செய்வார் என எதிர்பார்க்கின்றோம்.

தன் கணவருக்கு எப்படி செயலாளர் போல் தொழில்ரீதியில் திருமதி காண்டீபன் செயற்பட்டாரோ அதே வகையில் தன் புதல்வனுக்கும் assistant ஆக இருந்து மக்களுக்கான சேவையை தன் கணவன் செய்ததுபோல் செய்யவேண்டும் என்பது என் கோரிக்கையாகும். காண்டீபன் ஐயா வாழ்ந்து கொண்டிருக்கும் இல்லம் போல் காட்சியளிக்கும். அவுஸ்திரேலியாவில் வாழும் மகளும் லண்டனில் படித்துக் கொண்டிருக்கும் இளைய மகளும் தங்கள் அப்பாவின் பாணியில் மக்களுடன் அதாவது குறிப்பாக அப்பாவின் தொழில் ரீதியான நண்பர்கள், வாடிக்கையாளர்களுடன் தொடர்பை பேணுங்கள். உங்கள் அப்பா பிரத்தட்ஷணமாக உங்களுடன் இருப்பதாகத் தெரியும். அவரின் அமைதியும் சாந்தமும், அவரின் வெற்றிப் படிகளாக உயர்ந்து வளர்ந்து நிற்பதாக எனக்குத் தெரிகின்றது.

2019 ம் ஆண்டு செப்டெம்பர் ஆரம்பத்தில் சுவிஸ் திரும்புமுன் அவரை மீண்டும் சந்தித்து விடைபெற்றேன். எங்கள் நாடும் நாட்டில் எமது தமிழ் மக்களின் குறைபாடுகளும் அவர் உள்ளத்தில் பெரும் சுமை ஒன்றைத் தூக்கிக் கொண்டு நிற்பது போன்ற எண்ணக்கருவை நான் அவதானித்தேன். எமது இளைஞர்களுக்கு பேரிடர்கள் வந்தபோது தான் வக்கீல் என்ற தகைமையில் பல விதமான உதவிகள் செய்ய முடிந்தது என்று அவரது மனத்தில் உள்ள aspirations வெளிப்பட்டதை நான் அவதானித்தேன். அப்படியான நல்ல சிந்தனை, தூய்மையான எண்ணங்கள் கொண்ட ஒருவர் எமக்குள் மஹாத்மாவாக வாழ்ந்து குறுகிய காலத்தில் இறைபாதங்களை அடைந்து விட்டார்.

மாலையானது வைத்தீஸ்வரன் கோவில் மணியடித்தது. அன்று வைத்தீஸ்வர ஆலய அம்பாள் திருவிழா பூர்த்தி நாள் கொடியிறக்கம். என்னை அவசரப்படுத்தி விரைவில் அங்கு செல்லுங்கள் கொடியிறக்கம் பார்த்துவிட்டு, கதிரிப்பாய் செல்லுங்கள் என்று அன்புக்கட்டளையிட்டார். அது போலவே நான் அங்கு சென்றேன். கொடி இறக்கத்துக்கான பூஜாக்கருமங்களை அந்தணர்கள் செய்து கொண்டு இருந்தார்கள். ஆக நான் சிவனருள் பெறுவதற்கு வக்கீல் சிவனருள்சுந்தரம் வழிகாட்டி அனுப்பினார். கொடியிறக்க தரிசனத்துடன் சிவன் அம்பாள் தரிசனங்களும் பெற்று வடக்கே இருக்கும் வல்வை முத்துமாரி அம்மன் மூலஸ்தானக் காட்சியும் கண்டு என் ஊர் கதிரிப்பாய் சென்றேன். ஏறக்குறைய நாற்பது வருடங்களின் பின் இந்த இரு ஆலயங்களையும் சென்று தரிசிக்கக் கூடிய புண்ணியம் ஐயா காண்டீபன் அவர்களால் கிடைக்கப் பெற்றது.

என்றும் எங்கள் மனங்களிலும் எங்கள் அறக்கட்டளை வளாகத்திலும் இந்த பெயர் வாழ்ந்து கொண்டே இருக்கும். அவர் பெயரில் ஒரு சிறு மண்டபம் அமையும்.

சுபம்.

**அன்புடன் த.நமசிவாயம்**
மாநகராட்சி மூத்த உறுப்பினர்
லொசான், சுவிட்சர்லாந்து.

## இனியவர், வல்லவர், புன்னகை முகமானவர்...

1986ம் அண்டு தை மாதத்தை மீட்டிப்பார்க்கிறேன். கல்முனை காணி மேலதிக மாவட்ட பதிவாளர் அலுவலகத்திலிருந்து பருத்தித்துறை காணி மேலதிக மாவட்ட பதிவாளர் அலுவலகத்திற்கு மாற்றலாகி வந்த காலம்.

அக்காலப்பகுதியில் பல சட்டத்தரணிகளுடன் உறுதிகள் மற்றும் அவர்களின் வேலைகள் சம்பந்தமான தொடர்பாடல்கள் இருந்தன. அவர்களுள் சட்டத்தரணி சிவனருள்சுந்தரம் அவர்களும் ஒருவராக விளங்கினார். நாட்கள் நகர்ந்து செல்ல அவருடனும் கலந்துரையாட வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. பழகுவதற்கு இனியவராகவும் செந்நிற மேனியும் உயர்ந்த தோற்றமும் நிமிர்ந்த நடையும் கொண்டவராகத் திகழ்ந்ததுடன் அவருக்கே உரிய தொனியில் விடயங்களைத் தெளிவாகக் கூறுவதில் வல்லவர்.

1990களில் ஒருநாள் அவரில்லம் சென்றிருந்தேன். காலைவேளை மனைவி பிள்ளைகளுடன் காலை உணவாக தோசை சாப்பிட்டுக் கொண்டிருந்த நேரம் என்னைக் கண்டதும் இன்முகத்துடன் வரவேற்றார். நான் மறுத்தும் என்னையும் அன்பாக வலியுறுத்தி சாப்பிட வைத்தார். அவ்வேளையில் குடும்பத்தினரையும் அறிமுகம் செய்து வைத்ததுடன் தனது துணைவியார் பருத்தித்துறை மக்கள் வங்கி முகாமையாளராக கடமையாற்றுவதாகவும் தெரிவித்தார். பின்னர் ஒருநாள் பருத்தித்துறை நகர் சென்றபோது நல்லெண்ண விஜயமாக மக்கள் வங்கி முகாமையாளரை சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தேன். பரஸ்பரம் உரையாடி முடியும் போது ஒரு வங்கி நாட்குறிப்பையும் மனமுவந்து தந்தார். நன்றி தெரிவித்து திரும்பினேன். நீண்ட நாட்களின் பின்னர் ஒரு காலைப் பொழுது சிவனருள்சுந்தரம் அவர்கள் என்னில்லம் வருகை தந்திருந்தார். சுகநலம் விசாரித்தார். மனதில் பதியக்கூடிய பல நல்ல விடயங்கள் பற்றி கலந்துரையாடினார். நூல்களை வாசிப்பதில் அவருக்கு இருந்த

நாட்டமும் அவை பற்றி விரித்துரைக்கும் பாங்கும் வியக்கத்தக்கது. அவர் பற்றி நினைவுகூரும்பொழுது இன்றும் அவரது உரையாடல் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருப்பது போல் தோன்றுகிறது. அன்று பல விடயங்கள் பற்றி சிறப்பாக விபரித்துக் கொண்டிருந்த காரணத்தால் நேரம் போனதே தெரியவில்லை. மதிய நேரமும் அண்மியதால் பகல் மதிய உணவு பற்றி அன்பாக அணுகியபோது முதலில் ஏன் வீண் சிரமம் என மறுத்தார். எனினும் எனது அன்பு வேண்டுகோளை ஏற்றுக்கொண்டார். அவருடன் பழகிய நாட்கள் என்றும் நெஞ்சை விட்டகலா.

"நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடையாளர் தொடர்பு"
(நல்ல நூல்களைப் படிக்குந்தோறும் அவை இன்பம் பயத்தல் போன்று நற்குணமுடையோரின் நட்பும் பழகுந்தோறும் இன்பம் பயப்பதாகும்)

"Like the pleasure in reading good books (again and again) is the friendship of the cultured continually cultivated."

ஒருநாள் நான் உதயன் பத்திரிகையை புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தபோது திரு.சிவனருள்சுந்தரம் சட்டத்தரணி அவர்களும் அவரது துணைவியார் மக்கள் வங்கி முகாமையாளர் அவர்களும் யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ள நிகழ்வு ஒன்றில் பிரதம விருந்தினர்களாக கலந்துகொள்ளவுள்ளமை பற்றி அறிய முடிந்தது. அந்நிகழ்வு நடைபெற்ற சில வருடங்களின் பின்னர் திடீரென ஒருவகை நோயினால் அவர் பாதிக்கப்பட்டதாக அறிந்து அதிர்ச்சியடைந்தேன். ஆகவே ஒருநாள் அவரில்லம் சென்றிருந்தபோது தமது தொழில் சார்ந்த விடயம் தொடர்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார். என்னைக் கண்டதும் அவர் எழுந்து மெல்ல மெல்ல நடந்து வரும்போது அவரின் நிலைமை புரிந்து அவர் துணைவியாரையும் அருகில் அழைத்திருந்தார். அவரது உடல்நிலை பற்றி விசாரித்தபோது விபரங்களை விரிவாக கூறினார். அதைத் தொடர்ந்து மனைவியின் உதவியுடன் தனது உறுதி வேலைகளை

செய்வதாகவும் தெரிவித்தார். அந்த தருணத்தில்கூட தான் வாசிக்க பயன்படுத்திக் கொண்டிருந்த புத்தகங்கள் சிலவற்றை எனக்கு காட்டினார்.

அவரின் நிலையைக் கருத்திற் கொண்டு மீண்டும் ஒரு சந்தர்ப்பத்தில் அவரில்லம் சென்றிருந்தேன். தமது அலுவலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த அவர் எழுந்து வரவேற்று என் அருகில் வந்தார். அவரது உடல்நிலை பற்றி கேட்டறிந்தேன். தாம் நீதிமன்றங்களுக்கு கிளிநொச்சி உட்பட தமது தொழில் நிமித்தம் முச்சக்கர வண்டி மூலம் சென்று கடமையில் ஈடுபடுவதாக தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து அவருகே நின்ற மகனைப்பற்றி கூறும் போது அவர் சித்திரங்கள் வரைவதில் வல்லவர் என பெருமையுடன் தெரிவித்து மகிழ்ந்தார். மகனால் தீட்டப்பட்ட சில ஓவியங்களையும் காட்டினார். கண்டு வியந்தேன்.

மேலும் தாம் மேற்கொள்ளும் மருத்துவம் மற்றும் பயிற்சிகள் பற்றியும் விளக்கினார். அவர் அப்பொழுது கூறிய விடயம் என்னை ஆச்சரியப்படுத்தியது. அதாவது யாழ்ப்பாண உதவிப் பிராந்திய முகாமையாளராக கடமையாற்றி வந்த அவரது துணைவியார் வீட்டுச் சூழல் காரணமாக சேவைக்காலம் முடிவடைய முன்னரே பதவியிலிருந்து ஓய்வுபெற வேண்டியநிலை ஏற்பட்டதாக தெரிவித்தார். அவருடனான உரையாடல் முடிந்ததும் நான் வீடு திரும்பினேன். இதுவே அவரை நான் இறுதியாக சந்தித்த சந்தர்ப்பம்.

அவரது பிரிவு தொடர்பான புகைப்படத்துடனான அறிவித்தலை அன்றைய உதயன் பத்திரிகையில் பார்த்ததும் திகைத்தேன். நம்பமுடியவில்லை!

அவரது இறுதி நிகழ்வில் கலந்து கொள்ளவேண்டும் என்ற திடத்துடன் அன்று பிற்பகல் புறப்பட்டு வல்வெட்டித்துறையை சென்றடைந்தேன். அவ்வேளை மரண ஊர்வலம் வேம்படி சந்தியில் மயானத்தை நோக்கி திரும்பிக்கொண்டிருந்தது. ஊர்வலத்துடன் மெல்ல மெல்ல சென்று இறுதியாக வாய்க்கரிசி போடும்போது அன்றலர்ந்த தாமரை போல் மிளிர்ந்த முகத்துடன் அவர் மீளாத்துயில் கொண்டிருப்பதை கண்டேன்.

“நிலையாமையே வாழ்க்கையின் நிலைத்த பண்பு” என்று எமக்கு உணர்த்திவிட்டு சென்றுள்ளார்.

அன்னாரின் பிரிவுத்துயரில் மூழ்கியிருக்கும் அன்புத்துணைவி, பிள்ளைகள், உடன்பிறப்புக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் இத்துயரிலிருந்து மீள எல்லாம் வல்ல இறைவன் சக்தியைக் கொடுக்க வெண்டுமென வேண்டுவதுடன் அன்னாரின் ஆத்மா இறையடி இணைந்து சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**சி.குலசிங்கம்**
ஓய்வுநிலை மேலதிக காணிப்பதிவாளர்

## நல்லுள்ளம் கொண்ட ஆசான்...

நான் சட்டக்கல்லூரியில் 1ஆம், 2ஆம் ஆண்டுகளில் படித்துக் கொண்டிருந்த வேளையில் கொழும்பில் என்னுடைய room-mates ஆன ICMA நண்பர்களான வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஆ.பாலரஞ்சன், சா.ஸ்ரீபதி ஆகிய இருவரினதும் மூலமாக காண்டீபன் Sir ஐப்பற்றி தெரிய வந்தவுடன், அக்காலப்பகுதியில் Sir ஐ எனது நண்பர்களுடன் ஒரு முறை சந்தித்து உரையாடியதும் நினைவுக்கு வருகிறது. அச்சந்திப்பு கொழும்பிலா அல்லது ஊரின் இந்திரவிழாவிலா என்பது சரியாக ஞாபகம் இல்லை. சிறிது காலத்தின் பின்னர் Sir ஐ சட்டத்தரணியாக பருத்தித்துறை நீதிமன்ற வீதியில் எங்களுடைய வீட்டின் முன்பாக உள்ள அவரது office இல் பலமுறை சந்தித்து உரையாடிய வேளையில்தான் அவருடைய தாயாரும் எனது தாயாரும் சிறுவயது பள்ளித் தோழிகள் என்பதும் எனக்கு தெரியவந்தது.

நான் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்தவுடனேயே தாமதிக்காமல் 1987ஆம் அண்டு மாசி மாதத்தில் Solicitor Exam ஐ Pass பண்ணும் நோக்கில் UK சென்று 31 வருடங்கள் கழித்து 2019இல் ஊர் திரும்பி பருத்தித்துறை நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக பணியாற்றத் தொடங்கிய வேளையில் தான் மீண்டும் Sir உடனான நெருக்கம் ஏற்பட்டதுடன் நான் அவருடைய junior ஆக அவரிடம் தொழில் பழக முக்கியமாக நீதிவான் நீதிமன்றில் (MC) சந்தர்ப்பம் கிடைத்தவுடன் அவருடைய பல அறிவுரைகளையும் ஏற்றுக் கொண்டேன். அவரில்லாவிடின் MC யில் என்னுடைய தொழிலைத் தொடங்க தாமதம் ஏற்பட்டு இருக்கும். அதற்கான காரணம் என்னுடைய தந்தையார் சட்டத்தரணி நாகலிங்கமுதலி மாவட்ட நீதிமன்றில் (DC) மட்டுமே அவர் காலமாகும் வரையில் தொழில் புரிந்துள்ளார். அதனால் தான் நான் MC யில் பணியாற்றத் தயக்கம் காட்டினேன்.

பங்குனி 5ஆம் நாள் Sir கேட்டிருந்தமைக்கு இணங்க, அவரை சந்தித்தபோது அவரிடம் எனது நன்றியை தெரிவித்த வேளையில், அதுதான் எங்களுடைய கடைசி சந்திப்பு என்று நான் நினைக்கவே இல்லை. ஏனென்றால் அன்றும் கூட தொழில் ரீதியாக எனக்கு உதவ அவருடைய விருப்பத்தினை தெரியப்படுத்தியிருந்தார்.

அன்றைய சந்திப்பின் போதும் கூட அவர் உடல்ரீதியாக மட்டுமே சோர்வடைந்திருந்தாரேயொழிய மனதளவில் அவருடைய வழக்குகளுக்கு என்னென்ன செய்யப்பட வேண்டும் என்பதிலிருந்த துல்லிய ஞாபக சக்தி (Computer Brain) யினைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தேன். அன்று நீண்ட நேரம் என்னுடைன் மிக மிக மகிழ்ச்சியாக கதைத்துக் கொண்டிருந்தார்.

அவருடைய மறைவினால் வாடும் அவரது மனைவி, பிள்ளைகள் மற்றும் உறவினர்களுடன் துக்கத்தினை பகிர்ந்து கொள்கிறேன்.

அவரது ஆத்மா சாந்தியடையட்டும்.

நேர்மையான நல்ல உள்ளம் கொண்ட ஆசானை இழந்து வாடும்
**சட்டத்தரணி,**
**நா.சிவானந்தமுதலியார்**

ஓம்
அன்பே சிவம்

## புகழுடன் தோன்றிய க.சோ.சிவனருள்சுந்தரம்

உடல் சார்ந்த அறிமுகத்திற்கும் உறவிற்குமப்பால் ஆன்மா சார்ந்த உறவு உண்டு. இந்த உறவைப் பற்றி சாதாரணமாக பொது வாழ்வில் எவரும் சிந்திப்பதுமில்லை, அதையிட்டு அக்கறை கொள்வதுமில்லை. அவ்வாறான உறவு பூர்வ ஜென்ம ஆன்ம உறவாகும். சர்வமும் சிவ மயம் என்பது சிவ தத்துவம். “அவனன்றி ஓர் அணுவும் அசையாது” என்பதும் “அவனருளாலே அவன் தாள் வணங்கி” என்பதுவும் சைவர்கள் மத்தியில் அறியப்பட்ட முக்கிய விடயங்களாகும்.

நான் சைவ சமயிகளின் பிள்ளையாகப் பிறந்தது “அவன் அருளாலாகும்”. சைவனாக நான் வாழ்வதும் “அவன் அருளாலாகும்”. வன்னியில் 20 வருடங்கள், பதினொரு இடங்கள் இடம் பெயர்ந்து வாழ்ந்ததும் “அவன் அருளாலாகும்”. அந்த வனவாச காலம் தான் சிவதிரு.சோமசுந்தரம் சிவனருள்சுந்தரம் (செல்லப் பெயர் காண்டீபன்) அவர்களை நான் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் சந்திக்க சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியது. புதுக்குடியிருப்பில் நான் இடம் பெயர்ந்து வாழ்ந்த பொழுது 2002 ஆம் ஆண்டில் முல்லைத்தீவு அரச அதிபர் சிவதிரு. சுந்தரன் அவர்களின் உதவியுடன் அரச மற்றும் தனியார் உத்தியோகத்தர்களுக்கு யோகக் கலையை போதிக்க ஆரம்பித்தேன். அவ்வேளை அங்கு மக்கள் வங்கியின் முகாமையாளராய் கடமையாற்றிய திருமதி.சிவனருள்சுந்தரம் சரஸ்வதி அவர்கள் தனது மகள் செல்வி ப்ரீதா உட்பட தனது வங்கி உத்தியோகத்தர்கள் சிலரையும் எமது யோகாசனப் பயிற்சியில் கலந்துகொள்ள அழைத்துவந்து இணைத்துக் கொண்டார். இந்த தொடர்பின் மூலமாக நான் சிவதிரு.காண்டீபன் அவர்களை சந்திக்கும் சந்தர்ப்பம் உருவாகியது.

சிவதிரு சோ.சிவனருள்சுந்தரம் அவர்களையும் அவரின் குடும்பத்தினரையும் நான் சந்திக்க நேர்ந்தது ஆன்ம உறவிலான சிவனின் அருளாலாகும் என்பதை நான் உணர்ந்து அனுபவிக்கிறேன். ஆன்ம உறவு என்பது முற்பிறவி சரர்ந்தது என்பதை இவ்விடத்தில் கூறிவைக்கிறேன். இது பூர்வஜென்ம தொடர்பாகும். எனது தந்தை தம்பு இரத்தினம்பிள்ளை (பயில்வான் இரத்தினம் என்று அறியப்பட்டவர்) அவர் உடற் கலைகள் பலவற்றில் தேர்ச்சி பெற்றவர். சிவதிரு சோ.சிவனருள்சுந்தரம் அவர்களின் தந்தையும் பயில்வான் சோமு என்று பிரசித்தி பெற்றவர். இவர்கள் இருவரும் ஒரே கலையில் வல்லுனர்கள். இருவருக்குமிடையில் உறவுமுண்டு. இந்த இரண்டு பயில்வான்களின் புதல்வர்கள் தான் சிவனருள்சுந்தரமும் கலியுகவரதனும் (இந்த இரங்கல் செய்தியை வரைந்தவர்) ஆவர். இரண்டு பரம்பரையின் பூர்வ ஜென்ம உறவினால் தான் நான் வன்னி வனவாசத்தில் சிவனருள்சுந்தரம் அவர்களை சந்தித்தேன் என்பதை நான் உணர்ந்துள்ளேன். பூர்வஜென்ம உறவு மிகவும் வலுவானது. மனித வாழ்வில் இவ்வாறான உறவு மிகவும் அபூர்வமானது. அந்த வழியில் சிவனருள்சுந்தரமும் நானும் சிவன் அருள் பெற்றவர்கள்.

எனது மனைவி உமாதேவி அவர்கள் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் ஆங்கில ஆசிரியையாக அக்காலப்பகுதியில் கடமையாற்றினார். சிவதிரு.சோ.சிவனருள்சுந்தரம் அவர்களின் பிள்ளைகள் அந்த பாடசாலையில் கல்வி கற்றதனால் எனது மனைவியும் அவர்களின் பிள்ளைகளும் அறிமுகமானார்கள். இக் காரணத்தினால் எமது குடும்பமும் அவர்களின் குடும்பமும் குடும்ப நண்பர்கள் ஆனோம்.

சிவதிரு சோ.சிவனருள்சுந்தரம் அவர்கள் பல்துறைசார் பொது அறிவை பெறுவதில் தீவிர உணர்வு கொண்டு வாழ்ந்ததால் அவரை நான் சந்திக்கும் வேளையிலெல்லாம் சமகால விடயங்களுடன் தொடர்புபட்ட தான் பெற்ற அறிவை தொடர்புபடுத்தி உரையாடுவார். தமிழ்ப் பற்றும் சைவசமயப் பற்றும் தனி மனித சுதந்திரத்தில் தீவிர பற்றும் கொண்டவராக காண்டீபன் அவர் வாழ்ந்தார். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் மகாத்மா காந்தியுடன் இணைந்து போராடிய வினோபா அவர்களின் தீவிர பக்தனாக காண்டீபன்

வாழ்ந்தார். தனது மகனுக்கு வினோபா என்று பெயர் சூட்டியது மேற்கூறிய காந்தியவாதியான இந்தியாவில் வாழ்ந்த வினோபாவின் மேல் அவருக்கிருந்த அதிதீவிர பற்றே காரணமாகும். மல்யுத்தம், யோகாசனம், விளையாட்டு துறையிலும் அவர் வல்லுநராவார். வல்வெட்டித்துறையின் கின்னஸ் சாதனையாளன் ஆழிக்குமரன் ஆனந்தனுக்கு ஒரு சிலை அமைக்கும் முயற்சியில் நான் ஈடுபட்ட வேளை அத் திட்டத்திற்காக நிறுவப்பட்ட செயற்குழுவில் சிவதிரு.காண்டீபன் அவர்களும் ஒருவராவார். இக்குழுவில் பாராளுமன்ற உறுப்பினர் சிவதிரு சிவாஜிலிங்கமும் ஒரு உறுப்பினராயிருந்தார். சிவதிரு சோ.சிவனருள்சுந்தரம் அவர்கள் பாரிசவாத நோயினால் தாக்கப்பட்ட நிலையில் தன்னம்பிகையுடன் வாழ்ந்து சுயமாக பயிற்சிகளையும் இடைவிடாது செய்து நடக்கும் நிலைக்கு தன்னை பக்குவப்படுத்திக் கொண்டதுடன் சட்டத்தரணி கடமைக்காக மீண்டும் நீதிமன்றம் சென்றது அவரின் தன்னம்பிக்கைக்கான பலனாகும். இலங்கையில் வல்வெட்டித்துறை VVT என்று புகழ் பூத்த மண்ணில் அவதரித்து, வாழ்ந்து, அந்த மண்ணிலேயே சிவபதம் அடைவது பாக்கியமாகும்.

'தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று' எனும் வள்ளுவர் வாக்கிற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் சிவதிரு காண்டீபன் அவர்கள். அவர் சிவபதம் அடைந்தது வல்வெட்டித்துறை மண்ணிற்கு பேரிழப்பாகும். அவரின் ஆன்மா சிவனின் திருப்பாதக்கமலங்களில் சாந்தியடைய சிவனிடம் அனைவரும் வேண்டுவோமாக. அவரின் இழப்பால் பாதிக்கப்பட்டு துயருறும் அவரின் உறவுகள் அனைவருக்கும் சிவன் அருள் பாலித்து அவர்களின் துயரை ஆற்றுப்படுத்தும்படியும் சிவனிடம் அனைவரும் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி

**இரத்தினம்பிள்ளை கலியுகவரதன்**

எனது அம்மப்பா

எனது அம்மப்பா பெயர்
சிவனநேசந்திரம்.
அவர் என் மீது நிறைந்த
பாசம் வைத்திருந்தார்.
அவரை நான் ஐயா
என அழைப்பேன்.
அவர் இப்போது
வானத்திலிருந்து
என்னை ஆசிர்வதித்
துக் கொண்டிருப்பார்.

பா. ஆதவி

# Forever Unforgettable *Amarar* KAANDIPAN

**K**nowledgeable
**A**ccurate
**A**rrowed - approach and
**N**oble
**D**oor way to
**I**nfer
**P**erfect person
**A**nd allover
**N**eutral navigator
is **KAANDIPAN**

In spite of lawful he is very simple
Even to his family, humble to all
As such he is noble.


Heart feelings of few lines to my whole hearties friend

**Thangamayl**

## ஐயாவின் நினைவு தரும் நன்றிகளிவை...

எம்மை வாழ்வித்த
எம்குல விளக்கவர்
நோயுற்று இருக்கையில்
உரிமையுடன் உதவிய
வைத்திய உறவினர்க்கும்... தம்
மகத்தான சேவையால் - அவரை
மாண்புடன் மீட்டிட்ட
மருத்துவ குழாமிற்கும்...
அன்பான வார்த்தைகளுடன்
அனுதினம் அணுகியே - அவர்
மனஞ்சோராது மருந்திட்ட
அருமை நண்பர்கட்கும்...
வெளியூர் சென்று
சிகிச்சை பெறுகையிலே
மகிழ்வான உதவிகளால் - அவர்
குணமாக உதவித்த
உள்ளங்கள் அனைத்திற்கும்
இந்தியா சென்று
மும்முறை சிகிச்சைபெற
முன்னின்று உதவிய
முத்தான உறவுகட்கும் - இங்கும்
வைத்தியசாலையில் தங்கி
சிகிச்சை பெறுகையில்
சிறப்புடன் உதவிய
சீரிய உள்ளங்கட்கும்....
எம்வீதிப் போக்குவரத்து
கஸ்டமாக இருந்தபோதும்
இஷ்டமுடன் உதவிய
இனிய உள்ளங்கட்கும்....
மீண்டும் நீதிமன்றில் - ஐயா
உலாவிட உதவிய - நல்
உள்ளங்கள் அனைத்திற்கும்..
கருத்துள்ள நூல்களை
கடல்கடந்து சேகரித்து

| | |
|---|---|
| கனிவுடன் | அளித்து - அவர் |
| அறிவுப்பசி | தீர்த்திட்ட |
| அருமை | உள்ளங்கட்கும்.... |
| கரிசனையுடன் | அணுகி - நிதம் |
| கடமைபல | செய்திட்ட |
| அன்பர்கட்கும் | நண்பர்கட்கும்.. |
| வழிகாட்டிய | தீபம் - எம்மை |
| தரணியில் | தவிக்கவிட்டு |
| ஈசனுடன் | இணைந்தவேளை |
| உடனிருந்து | உதவிய |
| உறவுகள் | நட்புக்கள் |
| ஊரவர்கள் | அனைவர்க்கும்... |
| ஐயாவை | கௌரவிக்க |
| மலர்வளையம் | பிரசுரங்கள் |
| அஞ்சலிப் | பதாகைகள் |
| அடுக்காக | எடுத்து வந்தும் |
| அலைபேசி | வழியாக |
| அருகில் | வந்தும் |
| ஆறுதல்கள் | நல்கியே |
| எம்முடன் | துயர்பகிர்ந்த |
| எழிலான | உள்ளங்கட்கும் |
| இறுதி | அஞ்சலியில் |
| இதமுடன் | இணைந்துமே - எம் |
| இடரினைப் | பகிர்ந்திட்ட |
| இனிய | உள்ளங்கட்கும்.... |
| நினைவாய் | மலரொன்றை |
| நித்திலத்தில் | ஆக்குகையில் |
| ஐயாவின் | நினைவுகளை - நம் |
| அன்பான | தொடர்புகளை - நல் |
| ஆக்கங்களாய் | தந்திட்ட |
| அருமையான | உள்ளங்கட்கும்... |
| அச்சிட்டு | உதவியோர்க்கும் |
| இதயம் நிறை | நன்றிகளை |
| இருகரம் | கூப்பியின்று |
| இஷ்டமுடன் | இயம்பியே |
| நானிலத்தில் | நன்றிமறவா |
| ஐயாவின் | வழியினராய் |
| நன்றியுடன் | வாழ்ந்திடுவோம். |



ஐயாவின் எண்ணக்கடலில்

எழுதுகோல் கண்டெடுத்த முத்துக்கள் சில..

# Chithambara Remembered

I think it is a proper attitude and act of devotion to share with all by mentioning about the ups and downs of our beloved institution, Chithambara College, in various fields in which it served over the present century and also to remember those who played remarkable role in it.

By the hardships and hazardous experiences that he under- went for his education by walking up and down 10 miles to Point Pedro, a cherished and noble thought struck the mind of Mr.K.Chithambarapillai in the turn of the last century that he should found an educational institution for the people of Valvettiturai, who hit headline in the sea-faring and shipbuilding industry.

Thus our beloved College was established after his name as Chithambara Vidyalaya on 11th November 1896.

On hearing that the centenary celebration of our college was not celebrated with pomp and pageantry due to the uneasy situation that prevailed all over Northern Province and instead a Centenary Souvenir is being published to mark the occasion by our Past Pupils Association of Chithambara, and being a proud student of the college, I take this rare opportunity to pay respect and homage to so many notable past staff and students who contributed their mite in the promotion, advancement and development of this proud institution by writing a few lines of remembrance with due respect.

Mr.V.Sinnathamby was the Principal of this institution who did yeomen service when it was a Vidyalaya, between the 1st and 2nd world wars.

Four distinguished Indian Teachers came from Tamil Nadu and exerted every bit of their energy and sweat in imparting

knowledge to the students who thronged to this institution from and outside of all corners of this historic town Valvettiturai. They were, Mr.S.Vannamamalai Iyangar B.A., Mr.K.S.Krishna Iyangar M.A., Mr.K.Sivasailam B.A. and Dr.Srinivasa Iyangar Ph.D. (Doctorate in English Literature). All these noble beloved Indian teachers went back to India after their retirement. Their services of devotion is still vividly felt heartily by their proud students who served the country and the people by virtue of their high position and occupation in Government service and private lives.

Mr.S.Vannamamalai Iyenger was an excellent teacher of English and Logic. He mastered English in all aspects and respects and imparted that high standard of English which resulted in many students to occupy high positions in various fields such as Sri Lanka Administrative Service, Medical profession, Engineering profession, Legal profession and also in occupying high positions in the Government Clerical services and Post and Telecommunication services. Mr.Krishna Iyengar excelled teaching equally in English and Sanskrit. But all teachers taught all subjects with exemplary proficiency and versatility.

During the Principalship of Mr.Vannamamalai Iyangar and Mr.T.Arulsundaram with the help of other teachers viz; Messrs Murugupillai, V.Nadarajah, A.Subramaniam, G.V.Ratnam, M.V.Mahalingam, M.Kandiah, K.V.Nadarajah, N.Sundaramoorthy, M.Muthucumarasamy, V.Sathasivam, K.Kulanthaivel, S.Jegananthaguru, S.Thisaiveerasingham, P.Puvanasundaram, V.J.Jeyarajasingham, S.Ratnasingham, V.Shanmugarajah, A.Thiagarajah, P.Balasubramaniam, S.R.Ariaratnam, Kandappa, K.Paramaguru, A.Sivasamy, Velummylum, Mrs.Rajeswary Jegananthaguru and others, our college excelled in all the school educational and extracurricular activities.

It is also worthy to mention here about Mr.K.R.Srinivasa Iyangar who was here in this great little town from 1928 until 1932.

He left our school and finished his M.A. and obtained his doctorate in English Literature and culminated his career as the Vice Chancellor of the Andra Pradesh University. He on hearing a sad report of a pregnant woman being killed by the Sri Lankan Navy Gun Boat shelling in 1984, with a full and heavy heart for the people of Valvettiturai, he wrote an article captioned "A Requiem for the people of Valvettiturai" in full half page of Madras 'Hindu' paper which was also translated in the Tamil daily ' Ealanadu' in which he proudly mentioned that he got the theme for his "Australian Paradise" (a poetical work) from the way of hard life of the navigational sea - faring community of Valvettiturai. He remembered the sweet memories of his life with his students and people of Valvettiturai and quoted an incident that he saw at Valvettiturai. It is here only that he saw on the beam of our school building, a rat chasing after a snake instead of the snake chasing the rat which indirectly reflected and portended the bravery and courage that he saw in person of the people around here.

In the thirties, forties and fifties of this century our college produced many students who passed the London Cambridge Seniors and Senior School Certificate. During the late forties and early fifties our college came to the final in the national school volleyball championship. Many personalities who excelled in volleyball in the national level were worthy to be mentioned Messrs S.Balasingham , Rajaratnam, S.Panchalingam, C.Pathmanathan, S.A.Thuraisingam, K.Anantharajah, Sinnathurai, Mahotkadamoorthy, Vijayan, Kathirgamathamby (who represented the Ceylon National Volleyball Team), A.V.Arunachchalam and N.Kugathas in the fifties. In the sixties and seventies our college became Northern Province volleyball champion. Those who excelled in the sixties are Messrs M.Muthusamy, S.Pooranachandran, K.Thevasigamany, S.Sivagnanasuntharam, K.Mohanadas, K.S.Sivanarulsundaram, S.Jeyabalasingham and

S.Thangavadivel. In the year 1967 our college volleyball team went up to the semi-final in the National School Championship after winning three consecutive matches and was narrowly beaten at Kalutara, the score being 16-14 and 15-13.

Our college 1st eleven soccer team many a time became the champions in the Jaffna Schools Championship Tournament in the 'B' group. Some name worthy to be remembered and mentioned as those who excelled in the teams are Messrs S.Sivaganeshan, A.V.Arunachchalam, A.V.Kumar, K.Mylarumperumal, S.Tharmaratnam, A.S.Arulpiragasam, R.Thurailingam, R.Appulingam, S.Yogachandran, A.V.Nadarajah, V.Karthigesu, S.Sivagnanasundaram, S.Sivanesan, S.Rajadurai, T.Puthirasigamany, S.Thangavadivel, S.Jeyabalasingam and others.

Our College did well in athletics. Those who did well in athletics in the fifties, sixties and seventies are Messrs S.Sivapathasundaram (Put shot), R.Thurailingam (Put Shot), A.V.Arunachalam (Middle Distance), K.Balasingam, A.S.Arulpiragasam (Put shot), S.Sivagnanasundaram and K.S.Sivanarulsundaram (Sprint Events), T.Puthirasigamany, K.Vijeyarajah and others who won prominent provincial awards.

Mr.T.Navaratnarajah was a past student of this College who did excel in National Chess Championship tournaments and Mr.A.Ratnasingham also a distinguished player of Badminton, Table Tennis and Cricket in the Government Service Tournaments. They are all now leading a retired life.

In the field of drama, Late Mr.S.Yogaratnam and Mr.V.Paskarasundaram played their role admirably in the play "Veerapandiya Katta Bomman". Mr.S.Sivayogasundaram (Aruchunan) excellently played the role of 'Vithiar' and Mr.K.Chandralingam the role of 'Nandan' along with Mr. R.Sivasothy in drama 'Nandan'. The play won the first place in Jaffna U.D.C in 1958.

I with sheer memory of mine wish to say proudly that our past students did enter and do occupy in the administrative services of the nation with their distinguished career. Those remarkable personalities to be proudly mentioned are Messrs S.C.Manicavasagar C.A.S., R.S.Sivasubramaniam C.A.S., N.Pramsothy C.A.S., V. Velummylum C.A.S. and others.

In the medical profession those to be mentioned are Late Dr. R.Kumarapillai, Dr.S.Theivendran, Dr.S.Mahendran, Dr.S.Ramalingam, Dr.(Mrs) Ratneswary Veeravagu, Dr.V.Thiruvadivel (FRCS), Dr. (Miss) Indrani Narayanasamy and others.

Our past students who entered the engineering faculty and obtained their doctorate to be mentioned are Messrs Senthivel, Ph.D., A.S.Rajendran Ph.D., S.Paramasigamany Ph.D., C.Kandasamy, S.Pathmanathan, Sivalingam S.Shanmugavadivel, T.Sambasivam, Sri Ganeshavelautham and others.

Messrs. M.Nallanthuvan, S.Selvendra, V.Santhanagopal, Kanthasamy, Sivagnanam and Mrs.Sivagnanasundaram are to be mentioned as Chartered Accountants and Messrs. V.Thuraiswamy, M.Nadanasigamany, P.Kanthaswamy, S.Kumarasamy and others served as Accountants in various government departments.

In the field of Law some distinguished personalities occupied pristine positions in the Judicial Service of the nation late Mr.P.Sriskandarajah occupied the position of Supreme Court Judge. Mr.K.Balavadivel High Court Judge. Mr.N.Yogasigamany District Court Judge late Mr.K.Mothilal Nehru a prominent President counsel, Messrs K.Manoharan, K.S.Sivanarulsundaram, R.Kulanthavelu, Advocates and Messrs N.Velautham K.Ratnasingham and K.Nadesan Proctors.

Our college scout movement (12th Jaffna Troop) was initially trained and developed under the able guidance of Mr.S.R. Ariyaratnam, Mr.V.Ratnavadivel, Mr.S.Santhamoorthy and late Mr.M.Ariyaratnam and then under Mr.K.Chelvanayagam (Former

Principal of Chithambara). Our College (12th Troop) won the first place on many an occasion in the Jaffna Jamboree conducted by Jaffna schools. In 1965 our College was awarded the 'Island Merit Flag' for its services and skills. Late Mr.E.W.Kanangara, the patron of scout movement in Ceylon then, visited our school to honour our troop in 1965.

I will be failing in my objective if I fail to mention those who did well in elocution contests in the district and provincial level. Mr.Krishnamoorthy did well in Tamil elocution contest conducted by the N.P.T.A in the late sixties. Mr.Sritharan won remarkable places in the Junior group elocution contest in the District and Provincial level in the early sixties in English. Miss. Loudes Gnaneswary Marsalenpllai won first place in the District and Provincial level recitation and elocution contest in the late sixties. Mr.K.S.Sivanarulsundaram (Kandeepan) won District and Provincial awards in the senior and post senior group oratorial contests in Extempore in the late sixties and in 1970.

Misses Indra Narayanasamy, Parameswary, B.Poopathy, N.Praneswary and Messrs S.Sivayogasundaram and R.Sivaanbu and others fared extremely well in the contest for vocalist in the field of music.

In the eighties and nineties our College was badly damaged by shelling and bombing. In 1987 it was quoted in the Madras fortnightly magazine "Frontline" with photographs that our College had been bombed and damaged by the Sri Lankan Air Force as our College was situated and located in the Northern tip of Jaffna peninsula at Valvettiturai and very close to the Army Camp which was established hardly 200 yards away from the College, in the very place which was the bungalow owned by the Missionaries.

Many past students still do distinguish service in the international shipping field following their forefathers who had been so prominent in the field of navigation. Late Mr.K.Mohanadas

(Captain), Mr.S.Sivanesan (Captain) and Mr.P.Vijayarajah (Captain) were all past students of the College.

Messrs A.Thirupathy, T.Navaratnam, S.Gnanamoorthy, K.Srirangan, who are not living among us and Mr.V.Ratnavadivel were all past students of the Chithambara and did yeoman service for the improvement of town when they were Chairman of the Town Council. Late Mr.K.Sabaratnam who was also the Chairman of the Town Council contributed financially to the school. Other notable contributors to the school were Late Mr.S.V.Nadarajah, who donated an entire library and Late Mr.Paramsothy (Neduval Sothy) and Late Mr.K.Somasundaram (Payilvan) donated equipment for the Laboratory.

Many prominent brave people presently serving the Tamil community had also been past students of Chithambara.

I think I have given a genuine account of our College and correctly the glory of our past students, who did well in school as well as in their occupation to be remembered and emulated by the future generations.

May our College regain the lost glory before the end of the century.

**K.S.Sivanarulsundaram**
Attorney-at-Law

The above article was published in the Cithambara College's magazine issued in the centenary celebration.

# சிவபுரத்தில் தெய்வீக கருணை மழை

வல்வைத்திருநகரின் ஆண்டுதோறும் தை, மாசி, பங்குனி, சித்திரை ஆகிய மாதங்கள் ஆனந்தமும் ஆன்மீகமும் கலந்த மாதங்களாகும். பங்குனி உத்தரத்தில் வல்வை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சுவாமியினுடைய தீர்த்தத் திருவிழா சமுத்திரத் தீர்த்தமாக சிறப்புப் பெற்றுள்ளது. பங்குனி பூர்வபட்சத்தில் வைத்தீஸ்வர சுவாமியினுடைய திருக்கல்யாணத்திருவிழா, கைலாச வாகனத் திருவிழா, தேர், தீர்த்தம் என வல்வை மக்களும் அயற்கிராமத்து மக்களும் பயபக்தியுடன் விரதமிருந்து ஆராதித்துக் கொண்டாடப்படும் பக்தி பூர்வமான மகோன்னதமான திருவிழாக்களாகும். தீர்த்தத்தின் பின் அம்பாள் திருவிழா, சண்டேஸ்வரர் திருவிழா, வைரவபிஷேகம், வைரவர் மடை என்பன பக்த கோடிகள் தவமிருந்து ஆராதித்துப் போற்றும் விழாக்களாக இனிது முடிவடையும். வல்வை வைத்தீஸ்வரசுவாமி மூவர் காசியிலிருந்து கப்பலில்கொணரப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டு அருள்பாலிப்பவராவார்.

வல்வையின் தனிச்சிறப்பு தமிழர் வாழ்விலும் சைவ சமய மதவழிபாட்டிலும் இலங்கையில் எப்போதும் முற்போக்கானதும் ஆன்மீகம் கலந்ததுமாக அமைந்தே காலங்காலமாக வருகின்றது. 17ஆம் 18ஆம் நூற்றாண்டுகளின் வடபகுதியில் அமைந்த ஐந்து பெரும் துறைமுகங்களில் வல்வைத் துறைமுகம் சிறப்புமிக்கதாக அமைந்துள்ளது சரித்திர ஏடுகளில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக 19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இலங்கை வந்த எமேசன் செனன்ற் என்னும் ஆங்கில பிரமுகர் தான் எழுதிய ‘இலங்கை’ (Ceylon) என்னும் நூலில் வல்வெட்டித்துறை என்னும் பெரும்பட்டினம் இலங்கையில் வடபகுதியின் அமைந்த பெரும் துறையாகுமென்றும் அங்கே மரத்தினால் பெரும் சமுத்திரங்களில் ஓடும் கப்பல்கள் கட்டப்படுவதை தான் நேரில் கண்டதாகவும் அந்நூலிலே தெளிவாக குறிப்பிட்டுள்ளார்.

அப்படிக் குறிப்பிடும் பொழுது கப்பல் கட்டும் தொழில் மிகவும் முன்னேற்றம் அடைந்தநிலையில் அமைந்திருப்பதை குறிப்பிட்டு ஏறத்தாழ 100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனுபவங்கள் கொண்ட கப்பல் கட்டுமானப் பணிசெய்யும் தளமாக வல்வை இருந்துள்ளது என தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

சாந்தன்குளம் இராகவன் எழுதிய நம்நாட்டுக் கப்பல்கலை என்ற, முதலில் தமிழில் வெளிவந்த கப்பல்கலையைப் பற்றிய நூலில் யாழ்ப்பாணத்தின் பெருந்துறையான வல்வெட்டித்துறைக்கும் தமிழகத்தின் ஒரு பெருந்துறையான வேதாரணியத்திற்கும் இடையே 40 மைல் தூரந்தான் உள்ளது என குறிப்பிட்டு வல்வெட்டித்துறையின் பெருந்துறைமுகச் சிறப்பை தெளிவாகக் கூறியுள்ளார்.

மேலும் 1906ஆம் ஆண்டு வல்வெட்டித்துறைக்கு விஜயம் செய்த ஆங்கில கவர்னர் Blaks என்பவர் இங்குவந்த பொழுது 30 பெரும் வணிகர் கப்பல்களில் உயர்ந்த பாய்மரங்களில் வரவேற்புக்கொடிகள் அசைந்தாடி அவரை வரவேற்றதைப் பார்த்து அகமகிழ்ந்து கொழும்பையும் திருகோணமலைத் துறைமுகத்தையும் தவிர இவ்வளவு அதிகமான கப்பல்கள் தரிக்கும் துறைமுகமாக வல்வெட்டித்துறை இருந்துள்ளதெனச் சிறப்புச் செய்தியாகக் கூறி அங்குள்ள மக்களுக்கும் தனது அகமகிழ்ச்சியைத் தெரிவித்து சிறப்புச் செய்தி அனுப்பியுள்ளார். 1928ஆம் ஆண்டு இந்திய தேசத் தந்தை மகாத்மா காந்தி வல்வை சிவன் அம்மன் கோவில்களுக்கிடையில் அமைந்த தெய்வீக வீதியில் இறைவழிபாடு செய்து வல்வைப் பெருங்குடி மக்களுக்கு தமது சிறப்புச் செய்தியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தார். 1936ஆம் ஆண்டு பெரும் சைவத்துறவியான சுத்தானந்தபாரதி அவர்கள் இடப்புறம் வல்வை முத்துமாரியம்மனும் வலப்புறம் வல்வை வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமானும் கோயில் கொண்டு அருளி இருப்பதைப் பார்த்து வல்வைக்குள்ள பெருஞ்சிறப்பில் ஆன்மீகமும் வீரமும் தீரமும் மிக்க கடற்பிரயாண வாழ்வும் வல்வை மக்களுக்கு அமைந்திருப்பதைக்கண்டு வல்வை மக்களது ஆன்மீக உணர்ச்சியையும் பக்தியையும் பாராட்டி, வல்வை மக்களுக்கு தமது ஆசீர்வாதத்தையும் தெரிவித்து, வல்வைக்கு சிவபுரம் என சிறப்பு பெயர் சூட்டி அது இன்றும் வல்வெட்டித்துறையைக் குறிக்கும்

பொழுது சிவபுரத்திருநகரம் என ஆன்றோர்களால் பாராட்டி அழைக்கப்பட்டு வருகின்றது.

வல்வையில் மூன்று பெரும் ஆலயங்கள் இருக்கின்றன. கணபதி, அம்பாள், சிவன் ஆகிய மூன்று ஆலயங்களும் வானுயர்ந்த இராஜகோபுரங்களும் பக்தியை உருவாக்கும் அழகான வீதிகளும் அமைந்த ஆலயங்களாகும். கடந்த நூற்றாண்டின் நாற்பதுகளில் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் வல்வைக்கு வந்தே சிவாலயத்தில் தங்கி யாழ் குடாநாடு பூராகவும் சமய சொற்பொழிவுகள், கதாகாலாட்சேபங்கள் செய்து ஆன்மீக ஒளி பரப்பினார். அவர் வல்வை மக்களுடைய பக்தியையும் ஆலய வழிபாட்டில் வல்வை மக்களுடைய உயர்ந்த நிலைகளையும் கண்ணாரப்பார்த்து "வல்வை மக்களுக்கு ஆண்டவனால் சிறம்பம்சம் தரப்பட்டுள்ளது. அதுவானது ஊரையும் ஆலயங்களையும் எப்பொழுதும் பக்குவமாகவும் பரிசுத்தமாகவும் பேணிப்பாதுகாப்பதி லிருந்தே விளம்புகின்றது" என்பதை எடுத்துக்கூறி வல்வை மக்களுடைய குறிப்பாக தாய்க்குலத்தினுடைய தெய்வத் தொண்டும் பங்களிப்பையும் மிகவும் பாராட்டியது மட்டுமல்லாமல் காரைக்கால், கும்பகோணம், மதுரை, சென்னை போன்ற இடங்களில் நடந்த கதாகாலாட்சேபங்களில் வல்வை மக்களையும் தாய்மாரின் உயர்ந்த பக்குவ நிலைகளையும் அவர் எடுத்துக் கூறியது பெருமை மிக்க அம்சமாகும். வல்வை முத்துமாரி அம்பாளுடைய பூங்காவனம், சப்பறம், புலிவேட்டைத்திருவிழா, தேர், தீர்த்தம் என்பன மிகவும் பக்திப்பரவசம் மிக்க உயர்ந்த அம்சங்களைக் கொண்டு கொண்டாடப்பட்டு வருகின்றது.

சித்திரா பௌர்ணமியில் முத்துமாரிதேவி சமுத்திர தீர்த்தத்தில் தீர்த்தமாடும் காட்சி பார்ப்பவர் எல்லோரையும் பரவசப்படுத்தும். கடலிலே வள்ளங்கள், கப்பல்கள் இன்னோரன்ன தீர்த்தக் கடற்கரையைச் சூழ குவித்து நின்று தீர்த்தமாடும் விழாவினை சிறப்பிக்கின்றன. புகைக்கூண்டுகள் யாழ் குடா நாட்டிலே இலங்கையில் எங்கும் இல்லாதவாறு வானை நோக்கி விடப்படுவதும் கண்கொள்ளாக் காட்சி. தெய்வபக்தி இயற்கையோடு ஒட்டிட தீர்த்தக்காட்சி மற்றும் புகைக்கூண்டு வானில் செலுத்தப்படும் அழகான காட்சி, அக்கூண்டுகள் பல வர்ணத்தில் வானத்தில் ஆடி

அசைந்து செல்லும் காட்சிகள், கண்ணுக்கு எட்டாத தூரம்வரை போய் அவை மறையும் காட்சிகள் என்பன சிறியவர் முதல் பெரியவர்வரை பரவசப்படும் சிறப்பம்சங்களாகும். இரவிலே ஊர்முழுக்க பல வண்ணத்தில் ஒளிமயப்படுத்தப்பட்டு பல கலை நிகழ்ச்சிகள் நகரம் பூராகவும் நடத்தப்படுவது வேறெங்கும் காணமுடியாத பக்திப்பரவசம் மிக்க கலாசார நிகழ்ச்சியாகும்.

வல்வை முத்துமாரி அம்பாளுடைய விக்கிரகமும் வாலாம்பிகை சமேத வைத்தீஸ்வர சுவாமி கோவிலில் எழுந்தருளியிருக்கும் நடேசர் விக்கிரகமும் அழகிலும் ஜொலிப்பிலும் இனிய காந்தக் கருணைப்பார்வையிலும் எங்கும் பார்க்க முடியாதிருப்பதை பல சமய பக்த கோடிகள் கூறி நான் பல சந்தர்ப்பங்களில் கேட்டு மகிழ்ந்துள்ளேன். அவற்றினுடைய அமைப்புக்கள் பக்தர்கள் எக்கோணத்திலிருந்து பார்க்கிறார்களோ அப்பக்தர்களை பார்ப்பதாக அமைந்துள்ளது ஒரு சிறப்பம்சமாகும்.

வல்வையினுடைய ஆனி உத்தரத்திருவிழா, மார்கழி திருவாதிரை ஆகிய இரு நாட்களிலும் நடேச ஆருத்திரா தரிசனமான சுவாமி வீதி உலா வரும் போது ஆர்ப்பரித்து நாலாதிசையும் சுழன்று ஆடி வரும் காட்சி இலங்கையிலும் சரி வேறு எங்கும் இதுபோல் சிறப்பாக நடைபெறுவதில்லை எனப் பலரும் கூறுவதையும் நான் கேட்டிருக்கின்றேன். இவ்விரு நாட்களிலும் தமிழ்கூறும் நல்லொழுக்கமும் சைவத்தமிழுலகமும் இது பற்றி அறிந்து இக்காட்சியைக் காண்பதற்காக ஒரு வாய்ப்பை அவர்கள் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் எனும் நோக்கில் இதனைக் கூற விளைகின்றேன்.

கந்தசஷ்டி சூரன் போர், வல்வைத் திருநகரில் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சுவாமிகளுடைய வீதியில் மாலையிலும் முன்னிரவிலும் நடைபெறுவது போல் கச்சிதமாகவும் பக்தியுடனும் மக்கள் கண்டு கொள்வதை இங்கு கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

“சூரன் போரைப் பார்க்க வேண்டுமானால் வல்வைக்குச் சென்று போர் பார்” என சைவத்தமிழுலகம் கூறுவதை நான் இங்கு கூறிப் பெருமையடைய விளைகின்றேன்.

மேலும் சூரசங்காரத்துடன் 1938 ஆம் ஆண்டு சூத்திரத்தின் உதவியுடன் அந்தரங்கபட்சி வடக்கு வீதியில் பறக்க வைக்கப்பட்டது. வல்வையில் அதனை செய்த சிவன் கோயில் எசமானின்

பேரப்பிள்ளைகள் இதனை மீண்டும் 1984இல் பறக்கவிட்டது நினைவில் உள்ளது. இவையெல்லாம் பக்திப்பரவசத்துடன் பார்த்து மகிழ வேண்டிய உயர்ந்த கலையம்சங்களைக் கொண்டவையாகும்.

இக்குறித்த காலங்களில் வல்வையின் ஒவ்வொரு வீடும், தெருக்களும், சந்து பொந்துகளும் பெருக்கி துப்பரவாக்கி பயபக்தியுடன் தாய்க்குலத்தினுடைய அர்ப்பணிப்புடன் செயற்படுவதே வல்வையின் வளர்ச்சிக்கும் வீரத்திற்கும் அஞ்சா நெஞ்சத்திற்கும் பக்திக்கும் முற்போக்கு எண்ணத்திற்கும் அணிகலன்களாக இருப்பது என்று கூறுவது மிகையாகாது.

சைவத்திருமக்கள் இக்காலங்களில் வல்வைத் திருக்கோவில்களைத் தரிசித்து ஆசி பெறுவது உத்தமோ உத்தமாகும்.

**க.சோ.சிவனருள்சுந்தரம்** (காண்டீபன்)
**சட்டத்தரணி**

**இக் கட்டுரை 21. 04. 2016இல் வெளிவந்த யாழ் தினக்குரல் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டது.**


பிறர் வாழ்வில் ஒளியேற்றும்
சூரியன்கள் அஸ்தமிப்பினும்
பலர் நினைவுக்கடலில் ஒளிர்ந்திடுவர்...
தீபன் பதிப்பகம் – பருத்தித்துறை